Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, SEPTEMBER 22, 2021

புதன்கிழமை செப்டெம்பர் 22, 2021 | ஒளி: 07 கதிர்: 107 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free




## மூன்றாவது தடுப்பூசி பைஸர்

நாட்டு மக்களுக்கான மூன்றாவது தடுப்பூசியை வழங்குவதற்காக தடுப்பூசிகள் முற்பதிவு செய்யப்பட்டுள்ளது என அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதற்காக தேவைப்படும் 14 மில்லியன் பைஸர் தடுப்பூசிகளை முற்பதிவு செய்துள்ளதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

அதனடிப்படையில், மூன்றாவது தடுப்பூசியானது ஒக்டோபர் நடுப்பகுதியில் அல்லது நவம்பர் மாத ஆரம்பத்திலிருந்து வழங்கப்படும் என்றார்

## 'பேய்'க் கதை கூறினார் மைத்திரி



மதுபானசாலைகளை திறக்குமாறு அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்றும் கலால் வரி திணைக்களமே தன்னிச்சையாக தீர்மானம் எடுத்துள்ளதாக அரசாங்கத் தரப்பினரால் பதிலளிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், அரசாங்கத்தின் பிரதான பங்காளி கட்சிகளில் ஒன்றான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறி சேன எம்.பி, புதுக் கதையொன்றை கூறியுள்ளார்.

மதுபான நிலையங்களை திறப்பதற்கு உத்தரவு வழங்கியது யார் எனக் கேள்வியெழுப்பிய அவர், பேயாக இருக்கலாம் எனக் கிண்டல் செய்தார்.

மதுபான நிலையங்களை திறப்பதற்கு உத்தரவிட்டது யார் என்ற கேள்விக்கு சரியான பதில் தெரியாவிட்டால் இதுவே பதிலாகும் என்றார்.

தொடர்ச்சி P2

# கொலையாளியே விசாரிப்பதா?

- ஸ்ரீதரன் எம்.பி கேள்வி; உள்நாட்டு பொறிமுறையை மறுத்தார்
- ஓமந்தையில் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு மரண சான்றிதழா?
- தமிழ் மக்கள் நடுதெருவில்; பன்னாட்டு நிறுவனங்கள் பொறுப்பு
- ரத்வத்த மனநோயாளியா? கிளிநொச்சியில் நடந்ததை விவரித்தார்

பா.நிரோஸ்

ஜனாதிபதி தெரிவிப்பதைப்போல உள்ளக விசாரணைகளை ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன், சர்வதேச விசாரணையை பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் கோருகின்றனர். தமிழர்களை கொன்றொழித்த கொலையாளிகளே கொலையை விசாரிப்பதா? எனவும் கேள்வியெழுப்பினர்.

காணாமல் போனவர்களுக்கு மரணச்சான்றிதழ்களை வழங்குவததே ஜனாதிபதியின் பதிலாக இருக்கிறது.

இறுதி யுத்தக்காலத்தில் தமிழ் மக்களை நடுத்தெருவில் விட்டுச் சென்ற ஒவ்வொரு பன்னாட்டு நிறுவனங்களும் தமிழ் மக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்று (21) நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய ஸ்ரீதரன் எம்.பி, இம்மாதம் 12ஆம் திகதி அநுராதபுர சிறைச்சாலைக்குள் நுழைந்து, அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிட வைத்து,



தொடர்ச்சி P2

## 'பூஸ்டர்' வந்தால் டோஸ் சிக்கலாகும்




கொரோனா தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகளை எதிர்காலத்தில் மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதால், தற்போது செலுத்தப்படும் தடுப்பூசிகளை விரைவாக செலுத்திக்கொள்ளுமாறு,

தொடர்ச்சி P2

வடக்குக்கு வெளியே

## 95 சடலங்கள் தகனம்

எஸ் தில்லைநாதன்



வடக்கில், கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்களை தகனம் செய்வதில் நெருக்கடி நிலை காணப்பட்டுள்ளமையால், 95 சடலங்கள் வெளி மாவட்டங்களில் தகனம் செய்யப்பட்டுள்ளன என, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில், நேற்று (21) நடைபெற்ற ஊடகவியலாளர்

தொடர்ச்சி P2

## 'மலையக தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்க'

பா.நிரோஸ்

விசாரணைகள் இன்றி நீண்ட நாள்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையகம் உள்ளிட்ட வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டுமென நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் சபையில் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (21) அமர்வில் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், அநுராதபுர சிறைச்சாலைக்கு மதுபோதையில் சென்று, அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தியுள்ள சிறைச்சாலைகள் முன்னாள் இராஜாங்க அமைச்சர லொஹான் ரத்வத்தவுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதுத் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்



தொடர்ச்சி P2




கனடா பாராளுமன்றத் தேர்தல்

## ட்ரூடோ வெற்றி

கனடா பாராளுமன்றத் தேர்தலில் தனது பிரதமர் பதவியை ஜஸ்டின் ட்ரூடோ தக்கவைத்துக் கொண்டிருக்கிறார். எனினும், பெரும்பான்மை கிடைக்கவில்லை.

கனடாவில் கடந்த இரண்டாண்டுகளில் நடந்திருக்கும் இரண்டாவது பாராளுமன்றத் தேர்தல் இதுவாகும்.

கடந்த தேர்தலில் பெரும்பான்மை இல்லாததால், ஜஸ்டின் ட்ரூடோவால் முக்கிய சட்டங்களை நிறைவேற்ற முடியாமல் போனது. அதனால் பெரும்பான்மை பெறும் நோக்கத்துடன் தேர்தலை நடத்த கடந்த மாதம் பணித்தார்.

ஆனால், இந்த முறையும் அவர் நினைத்தபடி பெரும்பான்மை கிடைக்கவில்லை. நாடாளுமன்றத்தில் மொத்தமுள்ள 338 இடங்களில் பெரும்பான்மை பெற 170 இடங்கள் தேவைப்படும்.

தொடர்ச்சி P2

## இன்னுமோர் அரசியல் கைதி விடுதலை

செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல் கைதியான நடேசு குகநாதன், கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால், 16ஆம் திகதியன்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.



முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு பகுதியைச் சேர்ந்த நடேசு குகநாதன் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே, எட்டு ஆண்டுகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில்,

தொடர்ச்சி P2

## 12 தமிழ் கைதிகளுக்கு பாலியல் சித்திரவதை

பா.நிரோஸ்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட்டு 540 நாள்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட 12 தமிழ் இளைஞர்களின் அந்தரங்க உறுப்புகள் மிகவும் கேவலமான முறையில் சோதனை செய்யப்பட்டதாகவும், இதுவொரு பாலியல் சித்திரவதை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## புதிய கலாசார தூதுவராக யொஹானிக்கு அங்கிகாரம்




'மெனிக்கே மகே ஹிதே' பாடலை உலகளாவிய ரீதியில் பல மொழிகளிலும் ஒலிக்கச் செய்த இலங்கை யுவதியான யொஹானிக்கு (Yohani Diloka de Silva) புதிய கலாசாரத் தூதுவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த பாடல் தமிழ், ஹிந்தி,

தொடர்ச்சி P2




தமிழ் அரசியல் கைதிகளை

## சொந்த பகுதியில் உள்ள சிறைக்கு மாற்றுங்கள்

எஸ். நிதர்ஷன்

தமிழ் அரசியல் கைதிகளுடைய வழக்குகளின் விசாரணை காலம் முடிவுறும் வரை, அவர்கள் தமது சொந்தப் பிரதேசங்களுக்கு அருகாமையிலுள்ள சிறைச்சாலைக்கு மாற்றப்பட வேண்டும் என, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சகலதையும் மறைத்தது 'மது'


### ஹந்துநெத்தி தெரிவிப்பு; நெருக்கடிக்குள் நெருக்கடியை அரசாங்கம் ஏற்படுத்தும்



இந்த அரசாங்கம் இன்று சந்தித்துள்ள நெருக்கடிக்கு தீர்வு இல்லை என்றும் நெருக்கடியின் கீழ் பயணிப்பதால் மேலும் பல நெருக்கடிகளே ஏற்படும் எனத் தெரிவித்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

தொடர்ச்சி P2

## போதைப்பொருள் கடத்தியோரை பிடிக்க காரில் தொங்கிய பொலிஸ்



படத்தை பார்க்கும் போது ஏதாவது தென்னிந்திய திரைப்படத்தில் வரும் காட்சியென நீங்கள் நினைக்கக்கூடும். அதுதான் இல்லை. இது வெளிநாடொன்றில் அல்ல; இலங்கையில் நடந்த உண்மையான சம்பவமாகும்.

காருக்குள் ஹெரோய்ன் போதைப்பொருள் அடங்கிய இரண்டு பொதிகள் உள்ளன. காரின் பொனட்டில் படுத்து இருப்பவர், அந்தப் போதைப்பொருளை கைப்பற்ற சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஆவார்.

தொடர்ச்சி P2



## வெலிக்கடை கைதிகளின் எதிர்ப்பு தொடர்கிறது

வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகள் சிலர் ஆரம்பித்த எதிர்ப்பு நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# 'பேய்'க் கதை கூறினார் மைத்திரி

நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கத்திற்கு பணம் இல்லையெனவும் அதனாலேயே மதுபான நிலையங்கள் திறக்கப்பட்டதாகவும் தெரிவித்த அவர், எனவே மதுபான நிலையங்கள் திறக்கப்பட்டமையானது ஒலட அருவருப்பான செயல் என்றார்.

# 'மலையக தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்க'

நீண்டக்காலமாக உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் எவ்வித விசாரணைகளும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள மலையகம் உள்ளிட்ட வடக்குக், கிழக்கைச் சேர்ந்த தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இல்லை, விலை உயர்வு, தட்டுப்பாடு ஆகிய வார்த்தைகளே நாட்டில் பிரபல்யமாகி உள்ளது. அத்தியாவசியப் பொருள்களுக்கு நாட்டில் தட்டுப்பாடும், விலை உயர்வும், ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்வதற்கு மக்கள் திண்டாடுகின்ற நிலையில், மதுபானசாலைகளை திறந்து அரசாங்கம் கொண்டாடுகிறது. அத்தியாவசியப் பொருள்கள் பின்வழியாகவும், மதுபான போத்தல்கள் முன்வழியாகவும் விற்பனை செய்யப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

இரசாயன உர இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையால் தேயிலை உற்பத்தி குறைவடைந்துள்ளது. இதனால் நாட்டுக்குக் கிடைக்கும் அந்நிய செலாவணி குறைவடைந்துள்ளது. அரசாங்கம் சிலோன் தேயிலை நாமத்தில் கையை வைத்துள்ளது. வெளிநாடுகளில் இருந்து தேயிலையை இறக்குமதி செய்து, இலங்கை தேயிலையை அதில் 30 சதவீதம் கலந்து மீள அதனை ஏற்றுமதி செய்ய அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. இதனால் தரமற்ற சிலோன் தேயிலை சர்வதேச சந்தைக்கு செல்லவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன என்றார்.

இதேவேளை சீனாவிலிருந்து வந்த கொரோனா வைரஸ் போதாது என்று சீனாவிலிருந்து அரசாங்கம் இறக்குமதி செய்த உரத்திலும் ஆபத்தான இரு பக்றீரியாக்கள் இனங்காணப்பட்டுள்ளன.

இதேவேளை நிதி அமைச்சராக பெசில் ராஜபக்ஷ பதவி ஏற்றதும் நாட்டில் தேனும் பாலும் ஓடும் என்று மக்களை ஏமாற்றினார்கள். நாட்டை இனினும் இந்த அரசாங்கத்தால் திரம்பட ஆட்சி செய்ய முடியாத என்பது உறுதியாகியுள்ளது. எனவே அனைத்திலும் தோல்வியடைந்த அரசாங்கம் வீட்டுக்கே ஆட்சியை விட்டுவிட்டு வீட்டுக்கு செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# கொலையாளியே விசாரிப்பதா?

சப்பாத்துகளை நக்க சொல்லியுள்ளனர். அத்துடன், அவர்களை சுட்டுக்கொள்வேன் என முன்னாள் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அச்சுறுத்திய சம்பவமானது, தற்போதைய அரசாங்கத்தின் ஏதேச்சதிகாரத்தையே காட்டுகிறது.

கொழும்பிலிருந்து ஹெலிகொப்டரில் அநுராதபுரத்துக்குப் பயணித்து மதுபோதையில் தனது நண்பர்களுடன் சிறைச்சாலைக்குள் நுழைந்துள்ளார். இச்செயற்படானது சட்டம், நல்லிணக்கம் ஆகியவற்றைக் கேள்விக்கு உட்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

சாதாரண ஒருவரிடத்தில், துப்பாக்கி அல்லது வெடிப்பொருள்கள் இருந்து கைப்பற்றப்பட்டிருந்தால், அவ்வாறானவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பார். ஆனால், லொஹானின் விவகாரத்தில் அவ்வாறு ஒன்றும் இடம்பெறவில்லை. அவரிடமிருக்கும் சகல அதிகாரங்களை பறித்து, அவரை கைது செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இலங்கையின் வரலாற்றில் சிறைச்சாலைகள் அதிகாரிகளாலும், அவர்களின் அனுசரணையிலும் எராளமான படுகொலைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அதேபோல நீதிமன்ற உத்தரவின்றி சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு சக கைதிகளால் கொடுரமான முறையில் மரண தண்டனை வழங்கப்பட்ட சம்பவங்களையும் இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

இதுவரையில் எந்தவொரு படுகொலைக்குமான நீதி கிடைக்கவில்லை. லொஹான் ரத்வத்தையின் செயற்பட்டால் தமிழ் அரசியல் கைதிகளின் பாதுகாப்பு கேள்விக்கு உள்ளாகியுள்ளது.

கிளிநொச்சி ரயில் நிலையத்தில் 1985 ஆம் நின்றிருந்தவர்கள் மீது இராணுவ சிப்பாய் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டார். அதில், சுமார் 10 பேர் மரணித்தனர். பின்னர் நடைபெற்ற விசாரணையில் அவர் ஒரு மனநோயாளி எனக்கூறப்பட்டது. லொஹான் ரத்வத்த தமிழ் அரசியல் கைதிகளை சுட்டுக்கொன்றிருந்தால், அவரை இந்த அரசாங்கம் ஒரு மனநோயாளி எனக் கூறியிருக்குமா? எனவும் அவர் இதன்போது சபையில் வினவினார்.

காணாமலாக்கப்பட்டவர்களுக்கு மரண சான்றிதழ்களை வழங்கும் பணிகளை விரைவுபடுத்துவதாக ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி, ஐ.நா பொதுச்செயலாளரிடம் கூறியிருக்கிறார்.

இறுதி யுத்த காலப் பகுதியில் ஓமந்தையில் வைத்து தனது உறவுகளை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களே காணாமலாக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு காணாமலாக்கப்பட்டவர்களுக்கு மரணச்சான்றிதழ்களை வழங்குவதா ஜனாதிபதியின் பதில் என வினவினார்.

இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் எல்லோரும் கொல்லப்பட்டுள்ளனரா? ஒப்படைக்கப்பட்டவர்கள் திரும்பி வருவார்கள் என அவர்களது உறவுகள் காத்திருக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இருந்த ஐ.நா சர்வதேச நிறுவனங்கள் முன்பாக 2008ஆம் ஆண்டு சென்றிருந்த எம்மக்கள், அங்கிருந்து வெளியேற வேண்டாமென கண்ணீர் மல்க தெரிவித்தார்கள். எங்களை படுகொலை செய்வார்கள். எங்களை இலங்கை அரசாங்கம் கொல்லப் போகிறது என அவர்கள் கண்ணீரோடு தெரிவித்தார்கள்.

எனினும் தமிழ் மக்களை நடுத்தெருவில் அப்போது விட்டுச் சென்ற ஒவ்வொரு பன்னாட்டு நிறுவனமும் தமிழ் மக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானிலிருந்து அந்த மக்களை வெளியேற்ற விமானங்கள் அனுப்பப்பட்டன. எனினும் தமிழ் மக்கள் கொல்லப்படும்போது எங்களை பாதுகாக்க எவரும் விமானங்களை அனுப்பவில்லை; எவரும் கப்பல் அனுப்பவில்லை என்றார்.

உள்ளக விசாரணைக்கு தமிழர்கள் தயாராக வேண்டும் என அரசாங்கம் சொல்கிறது. சுட்டவர்கள் நீங்கள்; பொஸ்பரஸ் குண்டுகள், கொத்தணி குண்டுகளை வீசி கொன்றவர்கள் நீங்கள்; 4 இலட்ச மக்கள் இருக்கும்போது வெறும் 70 ஆயிரம் மக்கள்தான் இருப்பதாக உணவனுப்பியவர்கள் நீங்கள்; பட்டணியால் கொல்லப்பட்டவர்கள் நாங்கள். கொலையாளியே கொலையை விசாரிப்பது நியாயமா? எனவே உள்ளக விசாரணையை நாம் கேட்கவில்லை. பாதிக்கப்பட்ட நாங்கள் (தமிழ் மக்கள்) சுயாதீனமான, தமிழ் மக்கள் நம்பக்கூடிய நேர்த்தியான சர்வதேச விசாரணையை கேட்கிறோம் என்றார்.

# 'பூஸ்டர்' வந்தால் டோஸ் சிக்கலாகும்

சுகாதார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

வீடுகளுக்குச் சென்று முன்னெடுக்கப்படும் தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகளுக்கு பதிலாக, பிரதான மத்திய நிலையங்களில் மாத்திரமே தடுப்பூசிகள் எதிர்வரும் நாள்களில் செலுத்தப்படவுள்ளன. எனவே, எமக்கு எவ்வளவு காலத்துக்கு அந்த செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என தெரியாதுள்ளதாக பிரதி சுகாதார பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சில மாதங்களுக்குள் அடுத்த நடவடிக்கையை நோக்கி செல்லவுள்ளோம். அத்துடன், தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம்~ கடக்கும் நிலையில், சிலவேளைகளில் பூஸ்டர் டோஸ் குறித்து அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றது.

அவ்வாறு பூஸ்டர் திட்டத்தை ஆரம்பிக்க நேர்ந்தால், முதலாவது டோஸ் குறித்து கவனத்தில் எடுக்க முடியாது என்பதுடன், அதற்காக மேலும் நேரத்தை செலவிட முடியாத நிலை ஏற்படும். எனவே இவை அனைத்தையும் கவனத்தில் எடுத்தே, உடனடியாக தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ளுமாறு சகலரிடமும் கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# 95 சடலங்கள் தகனம்

சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், வடமத்திய மாகாணத்தில் 79 சடலங்களும் கிழக்கு மாகாணத்தில் 16 சடலங்களும் மின் தகனம் செய்யப்பட்டுள்ளன என்றார்.

அத்துடன், வடக்கில் ஓகஸ்ட் மாதம் மாத்திரம் 228 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அதன் பின்னர் இம்மாதத்தில் 20 நாள்களுக்குள் 260 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# புதிய கலாசார தூதுவராக யொஹானிக்கு அங்கிகாரம்

மலையாளம் உள்ளிட்ட இன்னும் பல மொழிகளிலும் வெளிவந்துள்ளது. அப் பாடல் அமெரிக்காவில் வீதியோரங்களில் தற்போது பாடப்பட்டு, மிகவும் பிரபல்யமாகிவருகிறது.

இலங்கை வரலாற்றில் 'யூடியூப்' பார்வைகளின் எண்ணிக்கை 100 மில்லியனைத் தாண்டிய பாடல் என்ற பெருமையை மெனிக்கே மகே ஹிதே பாடல் பெற்றுள்ளது.

இந்நிலையில், இந்தியாவின் தேசிய தொலைக்காட்சி சேவைகளில் புதிய கலாசாரத் தூதுவர் யொஹானி டி சில்வா தோன்றுவதில் பெருமிதம் கொள்கிறோம் என மிகப்பெரிய அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் இதனை தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ளது.

யூடியூப்பில் 110 மில்லியனுக்கும் அதிக தடவைகள் பார்க்கப்பட்ட 'மெனிகே மகேஹிதே' பாடல், பிரபலங்கள் முதல் பொது மக்கள் வரை இந்தியாவில் பல மில்லியன் மக்களின் இதயங்களைக் கவர்ந்துள்ளது.

இது, பல்லாயிரம் ஆண்டுகள் பழைமையானதும் உண்மையில் இயல்பானதுமான இந்திய -இலங்கை உறவின் ஆழத்தை, பிரதிபலிக்கின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சகலதையும் மறைத்தது 'மது'

சுனில் ஹந்துனெத்தி, அரசாங்கம் மற்றுமொரு நெருக்கடி ஏற்படுவதையே எதிர்பார்ப்பதாகவும் அவ்வாறு நெருக்கடி எதுவும் ஏற்படாது விட்டால், அரசாங்கமே ஏதாவது நெருக்கடியை ஏற்படுத்தி விடும் என்றார்.

கண்டி வைத்தியசாலைக்கு நேற்று (21) விஜயம் செய்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், எமது நாட்டில் ஒரு நெருக்கடி கீழே செல்லும் போது மற்றுமொரு நெருக்கடி மேலே வந்துவிடும். உதாரணமாக தேங்காய் எண்ணெய் நெருக்கடி. தேங்காய் எண்ணெயில் புற்றுநோயை ஏற்படுத்தும் காரணிகள் இருப்பதாக பாரிய பிரச்சினையொன்று ஏற்பட்டது. ஆனால் எமது நாட்டில் இன்றும் மக்கள் தேங்காய் எண்ணெயில் சமைத்த உணவையே உட்கொள்கின்றனர். இன்று இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் பரிசோதிக்கப்படுகின்றதா? இல்லை இப்போது அந்த பிரச்சினை அங்கேயே முடிந்து, புதிய பிரச்சினை தோன்றியுள்ளது.

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சிறைச்சாலைக்குள் புகுந்து ஆடிய ஆட்டம் எல்லாம் மதுபானசாலைகளை திறந்த பின்னர் காணாமல் போய்விட்டது என்றார்.

# வெலிக்கடை கைதிகளின் எதிர்ப்பு தொடர்கிறது

இதுவரை சுமார் பத்து கைதிகள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சிறைச்சாலை கூரையின் மீதேறி கைதிகள், தமது தண்டனையை குறைக்குமாறு கோரி எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுத்துள்ளனர் என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் கூறியுள்ளது.

# சொந்த பகுதியில் உள்ள சிறைக்கு மாற்றுங்கள்

அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், நேற்று முன்தினம் (20) இரண்டாவது முறையாகவும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# இன்னுமோர் அரசியல் கைதி விடுதலை

சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைக்கு அமைவாக, விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இதையடுத்து, இவரை 17ஆம் திகதியன்று, மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் பொறுப்பெடுத்து, அவரது வீட்டில் கொண்டுவந்து சேர்த்துள்ளனர்.

தன்னை விடுதலை செய்து, குடும்பத்துடன் இணைந்தமைக்கு ஜனாதிபதி உள்ளிட்டவர்களுக்கு, நடேசு குகநாதன நன்றிகளை தெரிவித்துள்ளார்.

இன்னும் 55 தமிழ் கைதிகள் இருக்கின்றார்கள். அவர்கள் சுமார் 15 தொடக்கம் 20 ஆண்டுகளுக்க மேலாக சிறையில் இருக்கின்றார்கள். என்னை போன்று அவர்களையும் விடுதலை செய்து அவர்களின் குடும்பங்களுடன் இணைந்து வாழ வேண்டும். ஜனாதிபதி இதனை செய்துகொடுப்பார் என்ற நம்பிக்கை அரசியல் கைதிகளிடம் இருக்கின்றது.

மிக விரைவில் அவர்களும் விடுதலையாகி குடும்பத்துடன் இணைய வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 12 தமிழ் கைதிகளுக்கு பாலியல் சித்திரவதை

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை அநுராதபுர சிறைச்சாலைக்குள் சென்று தமிழ் அரசியல் கைதிகளிடம் வெறியாட்டம் ஒன்றை ஆடியிருக்கிறார்.

2009ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு பொய் குற்றச்சாட்டுகளை சுமத்தி தடுத்து வைக்கப்பட்டவர்களிடமே இவ்வாறு லொஹான் ரத்வத்தை நடந்து கொண்டிருந்துள்ளார். இவர்களுக்கு எதிரான வழக்குகள் எதுவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தால் 5 அல்லது 6 வருடங்களுக்கு முன்பே அவர்கள் குற்றமற்றவர்கள் என விடுதலை செய்யப்பட்டிருப்பார்கள்.

தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுவரைக்கும் லொஹான் ரத்வத்தை செய்த குற்றச்சாட்டுகளுக்காக அவரின் அமைச்சுப் பதவி பறிக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் அரசாங்கம் லொஹான் ரத்வத்தைக்கு துணைநிற்கிறதா? என்கிற சந்தேகம் ஏற்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

லொஹான் ரத்வத்தயிடமிருந்து அனைத்துப் பதவிகளும் பறிக்கப்பட்டு, பாராளுமன்றத்திலிருந்தும் அவரை வெளியேற்றி சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். சம்பவம் நடைபெற்று 6 நாள்களுக்குப் பின்னரே சிறைச்சாலைகள் அதிகாரிகள் கைதிகளிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றால், 6 நாள்களாக இந்த விசாரணைகளை தடுத்தவர் யார்? எனவும் அவர் இதன்போது வினவினார்.

பயங்கரவாதத் தடைச்சத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 12 தமிழ் இளைஞர்கள், கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 26ஆம் திகதி அந்தச் சிறைச்சாலைக்குக் கொண்டுவரப்பட்ட இந்த இளைஞர்களை 29ஆம் திகதி நிர்வாணமாக்கி சோதனையிட்டுள்ளனர். 540 நாள்களாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள், பல்வேறு கொடூரமான சித்திரவதைகளுக்கு முகங்கொடுத்து உள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# போதைப்பொருள் கடத்தியோரை பிடிக்க காரில் தொங்கிய பொலிஸ்

சரி, சம்பவத்துக்கு வருவோம்.

இந்தச் சம்பவம், நுகேகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்திலேயே நேற்றுமுன்தினம் (20) இடம்பெற்றுள்ளது.

ஹெரோய்ன் போதைப்பொருள் அடங்கிய இரண்டு பொதிகளை எடுத்துக்கொண்டு, போதைப்பொருள் கடத்தல் காரர்கள் காரொன்றில் தப்பிச்சென்றபோது, அந்த பொலிஸ் கான்ஸ்டபிள், அக்காரின் பொனட்டில் தொற்றிக்கொண்டு அந்தக் கடத்தல் காரர்களை கைதுசெய்வதற்கு முயற்சிசெய்வதையே படத்தில் காணலாம்.

கான்ஸ்டபிளின் அந்த முயற்சியை அடுத்து, காரை இயக்கிய சாரதி, சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் மிகவேகமாகச் காரை செலுத்திச் சென்றுள்ளார். என்ன செய்வதென்று தெரியாமல், மிகவேகமாக காரைச் செலுத்திய சாரதி, சடாரென காரை திருப்பியுள்ளார். தொற்றிக்கொண்டிருந்த கான்ஸ்டபிள் அப்போது கீழே விழுந்துவிட்டார். சாரதியோ காரை அதேவேகத்தில் செலுத்தி தலைமறைவாகிவிட்டார்.

போதைப்பொருளை வழங்குவதற்கு வந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டிருந்த ஓட்டோ சாரதியும் இந்தக் குழப்பங்களுக்கு மத்தியில் தப்பியோடிவிட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சுற்றிவளைப்புத் தேடுதலுக்குச் சென்றிருந்த பொலிஸ் குழுவில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியிடத்தில் துப்பாக்கிகள் இருந்தபோதிலும், அதனை அவர்கள் பயன்படுத்தவில்லை என அறியமுடிகின்றது.

நுகேகொட பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல்களுக்கு அமைய, ராஜகிரிய, ஒபேசேகரபுர சந்தியில் வைத்தே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காரிலிருந்து கீழே விழுந்த பொலிஸ் கான்ஸ்டபிளின் தலை மற்றும் பாதங்களில் காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவரது தலையில் தையல் போட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடும் காயங்களுக்கு உள்ளான அவர், நாரஹேன்பிட்டி பொலிஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுற்றிவளைப்புக்குச் சென்றிருந்த பொலிஸ் குழு, அந்த இடத்தை அண்மித்த போது, ஓட்டோ சாரதி, போதைப்பொருள் அடங்கிய இரண்டு பொதிகளையும் கார் சாரதியிடம் கையளித்துள்ளார்.

விரைந்து செயற்பட்ட பொலிஸார், ஓட்டோ சாரதியை கைது செய்தனர். காரில் இருந்தவர்களை கைது செய்வதற்கு காரை சுற்றிவளைத்துள்ளனர்.

# ட்ருடோ வெற்றி

கடந்த தேர்தலில் ட்ரூடோவின் லிபரல் கட்சிக்கு 155 இடங்களே கிடைத்தன. இந்த முறை கூடுதலாக இரண்டு இடங்களில் முன்னிலையில் இருப்பதாக ஏபி செய்தி நிறுவனம் கூறியுள்ளது. எனினும் பெரும்பான்மைக்கு இது போதுமானதல்ல. கன்சர்வேடிவ் கட்சி 121 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

இந்திய வம்சாவளியைச் ஜக்மீத் சிங் தலைவராக இருக்கும் நியூ டெமாக்ரெட் கட்சி 27 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

மேலும் இரண்டு ஆண்டுகள் பதவிக்காலம் இருக்கும்போது தேவையற்ற வகையில் முன்கூட்டியே தேர்தல் நடத்துவதாக ஜஸ்டின் ட்ரூடோ மீது எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குற்றம்சாட்டி வந்தன.

## அறிவித்தல்

2020 கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து, பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்த மாணவர்களை மாவட்ட ரீதியில் இணைத்துக் கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன. www.ugc.ac.lk என்ற இணையத்தளத்திற்குள் பிரவேசிப்பதன் மூலம், மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# வடக்கு எம்.பிகளுக்கு அரசாங்கம் அழைப்பு

பா.நிரோஸ்

வடக்கு மாகாணத்தில் உள்ள தபாலகங்கள், உபதபாலகங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அமைச்சு ஆலோசனைக் கூட்டத்துக்கு வருமாறு, வடமாகாணத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் டலஸ் அழகப்பெரும அழைப்பு விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் மட்டுமன்றி நாடுமுழுவதிலும் உபதபாலகங்கள் அமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்ற நேற்றைய (21) அமர்வில் கலந்துகொண்ட கூட்டமைப்பு எம்.பியான ஸ்ரீதரனின் வாய்மூல விடைக்கான வினாவுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், வடக்கு மாகாணத்தில் மட்டுமன்றி நாடு முழுவதும் உபதபாலகங்கள் அமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆளணி பற்றாக்குறை காரணமாகவே இப்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், வடக்கு மாகாணத்தில் இயங்குகின்ற தபாலகங்கள், உபதபாலகங்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் தயாராக உள்ளது. எனவே, எமது அடுத்த அமைச்சு ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாண எம்.பிகள் கலந்துகொள்ள வேண்டும் என அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது, விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர், தபால்மா அதிபரையும் அழைத்து கலந்துரையாடி பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுத்தருவதாகவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதன்போது உறுதியளித்தார்.

## “கடனைப் பெறமுடியாத நிலையில் இலங்கை”

பா.நிரோஸ்



உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ கடன்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார் .

நேற்று (21) நடைபெற்ற பாராளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, எயார்பஸ் கொடுக்கல் வாங்கல்களுக்குப் பதிலாக விவசாயிகளுக்கு உரத்தை அரசாங்கம் கொள்வனவு செய்திருந்தால், நாட்டில் உரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்காது எனவும் தெரிவித்தார்.

எயார்பஸ் கொடுக்கல் வாங்கல்களுக்காக அரசாங்கம் 500 மில்லியன் டொலர்களை இலங்கை விமான சேவைகளுக்கு வழங்கியிருந்தது.

எனினும் நாட்டிலுள்ள 20 இலட்சத்துக்கும் அதிகமான விவசாயிகளுக்கு உரத்தை கொள்வனவு செய்வதற்கு 150 மில்லியன் டொலர்களே தேவைப்பட்டன. எனினும் அதனை அரசாங்கம் செய்யவில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இதன்போது தெரிவித்தார்.

இலங்கைக்கு கடன்களை பெற்றுக்கொள்ள முடியாத சூழலை அரசாங்கம் உருவாக்கியுள்ளது. உள்நாடு, வெளிநாடு சந்தைகளில் அரசாங்கம் கடனை பெற்றுக்கொள்ள முடியாத நிலையே காணப்படுகிறது. வரலாற்றில் முதன்முறையாக நாடு மேற்கண்ட காரணங்களால் வங்குரோத்து அடைய உள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களுக்கு என்ன நடந்துள்ளது எனக் கேட்கிறார்கள். பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள் அனைத்தும், முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை செலுத்தவே பயன்படுத்தப்பட்டன எனவும் அவர் தெரிவித்தார்.

நாடு கடன்பொறிக்குள் எதிர்காலத்தில் சிக்க உள்ளது. இதனால் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்படும். கொத்தமல்லியில் இருந்து ஐபோன் வரையில் அனைத்தையும் கறுப்பு சந்தைகளிலேயே பெற்றுக்கொள்ள முடிகிறது எனவும் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இதன்போது தெரிவித்தார்.




## ஜனாதிபதி-குவைத் பிரதமர் சந்திப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கும் குவைத் பிரதமர் ஷெயிக் சபா அல்-ஹமாட் அல்-சபா (Sheikh Sabah Al-Hamad Al-Sabah) ஆகியோருக்கு இடையில், நியூயோர்க்கின் மென்ஹெட்டனில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான 50 வருட கால நெருங்கிய தொடர்புகள், நட்புறவுடன் கூடிய இராஜதந்திர உறவுகள் தொடர்பில் நினைவுகூரப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதுமாத்திரமின்றி, இலங்கையர்கள் பலர் குவைத்தில் பணியாற்றுவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, தொழிற்பயிற்சிகளை பெற்றவர்களுக்காக மேலும் பல வாய்ப்புகளை வழங்குமாறு அந்நாட்டு பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## 509 பேர் கைது




நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறிய 509 பேர் கடந்த 24 மணித்தியாலங்களில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியை பேணாமை போன்ற குற்றச்சாட்டுகளுக்கு அமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

இதன்போது 25 வாகனங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதன்படி, கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் இதுவரை 76,145 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தும் நாடு பூராகவும் முன்னெடுக்கப்படும் என பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

## உயர்தர மாணவர்கள் தொடர்பில் ரணில் சபையில் கோரிக்கை

பா.நிரோஸ்



கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் தொடர்பில், சபாநாயகர் அவதானம் செலுத்த வேண்டுமெனத் தெரிவித்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி, சபாநாயகர் இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சபையில் கோரிக்கை விடுத்தார்.

சபாநாயகர் தலைமையில் நேற்று (21) கூடிய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றும்போதே ரணில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய ரணில், கல்வி பொதுத் தராதர உயர் தரப் பரீட்சைக்கான பாடத்திட்டங்களை நிறைவு செய்ய முடியவில்லை என மாணவர்கள் தெரிவிக்கிறார்கள். சில மாணவர்கள் நேரில் சந்தித்தபோதும் அவர்கள் இதையே கூறினார்கள். எனவே, சபாநாயகர் இதுதொடர்பில் அவதானத்தைச் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க எம்.பி இதன்போது தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கை தொடர்பில், கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கும் கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்தன, இது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்துடனும் பல சுற்று கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன எனவும் தெரிவித்தார். இதேவேளை, ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, உயர்தர பரீட்சைக்கு தோற்ற உள்ள மாணவர்களுக்கு விரைவாக பைஸர் தடுப்பூசிகளை வழங்கி, விரைவாக பாடசாலைகளை மீள திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

உயர்தர பரீட்சைக்கு தோற்ற உள்ள மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசிகளை செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் இதன்போது பதிலளித்தார்.

## தடத்தில் சிக்கியிருந்த பெண் சிறுத்தை மீட்பு

மு.தமிழ்ச்செல்வன்



முல்லைத்தீவு முருகண்டி காட்டுப்பகுதியில் மிருகங்களுக்கு வைக்கப்பட்ட தடத்தில் அகப்பட்ட நிலையில் சிறுத்தை ஒன்று கிளிநொச்சி வன ஜீவராசிகள் திணைக்களத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

வேட்டையாடுவதற்காக வைக்கப்பட்ட தடத்திலே சிறுத்தை அகப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது. வனஜீவராசிகள் திணைக்கள வைத்தியர் பீ.கிரிதரன் தலைமையிலான திணைக்கள உத்தியோகத்தர்கள் அச்சிறுத்தைக்கு மயக்க ஊசி செலுத்தி, மயக்கமடைய வைத்த பின்னரே அதனை மீட்டுள்ளனர்.

அவ்வாறு மீட்கப்பட்ட சிறுத்தையை வில்பத்து காட்டுக்குள் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியர் பீ.கிரிதரன் மேலும் தெரிவித்தார்.

## ரிஷாட் எம்.பிக்கு விளக்கமறியல் நீடிப்பு



கடந்த 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் அவரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



### ஜயந்த கெட்டகொட

## மீண்டும் எம்.பியானார்

பா.நிரோஸ்

ஆளுங்கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக, எம்.பி பதவியிலிருந்து விலகிய ஜயந்த கெட்டகொட மீண்டும் பதவியை ஏற்றுக்கொண்டுள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (21) கூடிய பாராளுமன்ற அமர்வின்போதே ஜயந்த கெட்டகொட மீண்டும் சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக்கொண்டார்.

2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடந்த பொதுத்தேர்தலை தொடர்ந்து பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக ஜயந்த கெட்டகொட நியமிக்கப்பட்டிருந்தார்.

எனினும், நிதி அமைச்சர் பசில் ராஜபக்‌ஷ தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்கு வருவதற்காக, ஜயந்த கெட்டகொட கடந்த ஜூலை மாதம் தேசிய பட்டியல் உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்திருந்தார்.

எவ்வாறாயினும் இராஜாங்க அமைச்சராக இருந்த அஜித் நிவாட் கப்ரால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்து, மத்திய வங்கி ஆளுநராக பதவியேற்றதால் ஏற்பட்ட பாராளுமன்ற வெற்றிடத்துக்கு ஜயந்த கெட்டகொட மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## மரண சான்றிதழ்களுக்கு கஜேந்திரன் எதிர்ப்பு

பா.நிரோஸ்

காணாமலாக்கப்பட்டவர்களுக்கு மரணசான்றிதழ்களை வழங்கப்போவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ கூறியிருப்பதை, தாம் வன்மையாகக் கண்டிப்பதாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்ற நேற்றைய (21) விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது; தற்போதைய ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளராக இருக்கும்போதே அவருக்குக் கீழே இருந்த இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களே காணாமலாக்கப்பட்டு உள்ளனர். இவர்களுக்கு மரண சான்றிதழ்களை வழங்குவதாக ஜனாதிபதி கூறுவதற்கு எந்தவிதமான உரித்தும் இல்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.



இலங்கையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் கொடூரமானது ஒன்று என ஐ.நா பொதுச்செயலாளரே கூறியிருக்கிறார். இவ்வாறான நிலையில், இச்சட்டத்தை நீக்குவதாக ஐ.நாவுக்கு இலங்கை உறுதியளித்திருந்தது. எனினும் இதுவரையில் அதனை செய்யவில்லை.

இவ்வாறான நிலையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் வழக்குகளை விசாரிப்பதாக ஜனாதிபதி கூறுகிறார். வழக்குகளை விசாரிப்பதாகக் கூறி இன்னும் பல வருடங்களுக்கு இவர்களை தடுத்து வைக்கவே முயற்சிக்கிறார் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

எனவே, இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. உடனடியாக தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

வவுனியாவில் கொரோனா மரண வீதம்

# அதிகரிப்பு

## 20 நாள்களில், 2,222 பேருக்கு கொரோனா தொற்று; 106 பேர் பலி

■ க. அகரன்



நாட்டில் ஏற்படும் கொரோனா மரண வீதத்தில், வவுனியாவில் கொரோனா தொற்றால் மரணிப்போரின் தொகை பாரியளவில் உயர்ந்து காணப்படுவதாக, சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில், இம்மாதம் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில், 2,222 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 106 பேர் உயிரிழந்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில், கொரோனா தொற்று வீதம் நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றது. நாட்டில் ஏற்படும் கொரோனா மரண வீதத்தில், வவுனியாவில் மரணிப்போரின் தொகை பாரியளவில் காணப்படுகின்றது.

வவுனியாவில் மக்களின் அசமந்தச் செயற்பாடுகளால், கொரோனா தொற்றாளர்களின் மரணத் தொகை கட்டுக்கடங்காமல் செல்கின்றது. எனினும், மக்கள் இதன் பாரதூரத் தன்மையை உணரவில்லை. இது பாரிய ஆபத்தான நிலைமையாக உள்ளது என, சுகாதார தரப்பினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

ஆகவே, வவுனியா மாவட்டத்தின் நிலை தொடர்பில் மக்கள் சிந்தித்து, சுகாதார நடைமுறைகளை இறுகப் பின்பற்றி செயற்பட வேண்டும் எனவும் சுகாதாரப் பிரிவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில், ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் 3,328 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 50 பேர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



வவுனியாவில்

## சீமெந்துக்கும் தட்டுப்பாடு

■ க. அகரன்

வவுனியாவில், சீமெந்துக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

நாட்டில், ஊரடங்குச் சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில், கட்டுமானப் பணிகளை முன்னெடுக்க முடியும் என்று, அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும், கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான சீமெந்துக்கு, வவுனியாவில் திடீரென தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, நகர்புறம் மற்றும் கிராமபுறங்களில் அமைந்துள்ள கட்டுமானப் பொருள்கள் விற்பனை செய்யும் வியாபார நிலையங்களுக்கு சீமெந்தை கொள்வனவு செய்வதற்காகச் செல்லும் பொதுமக்கள், அங்கு சீமெந்து இல்லாமையால், ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றமையை அவதானிக்க முடிகின்றது.







## தடுப்பூசி வழங்கல்...

20 – 30 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை, யாழ். கோப்பாய், மன்னார், வவுனியா ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில், நேற்று (21) முன்னெடுக்கப்பட்டன. (படப்பிடிப்பு: செந்தூரன் பிரதீபன், எஸ். றொசேரியன் லெம்பேட், க. அகரன்)



மன்னாரில்

## 30 வயதை கடந்தோரின் கவனத்துக்கு...!

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில், 20 வயதுக்கு மேற்பட்டவர்களுடன் இணைத்து, 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் இதுவரை எவ்வித தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கும், சினோஃபாம் தடுப்பூசியின் முதலாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை, நேற்று (21) முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இன்று (22) காலை 8.30 மணி முதல் 1.30 மணி வரை எழுத்தூர் அன்னை திரேசா அரசினர் த.க.பாடசாலையிலும், நாளை (23) காலை 8.30 மணி - மதியம் 1.30 மணி வரை உயிலங்குளம் றோ.க.த.க. பாடசாலை, புனித சவேரியார் பெண்கள் பாடசாலையிலும், வெள்ளிக்கிழமை (24) காலை 8.30 மணி - மதியம் 1.30 மணி வரை, கரிசல் றோமன் க.த.க பாடசாலை, தலைமன்னார் - கட்டுக்காரன் குடியிருப்பு றோமன் க.த.க பாடசாலையிலும், சனிக்கிழமை (25) காலை 8.30 மணி - மதியம் 1.30 மணி வரை சித்திவிநாயகர் இந்து பாடசாலையிலும் 20, 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் இதுவரை எவ்வித தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கும் தடுப்பூசி வழங்கப்படும்.

கொரோனாவால்

## நகரசபை உறுப்பினர் உயிரிழப்பு

### கிராமசேவகர்களுக்கும் கொரோனா

■ க. அகரன்



வவுனியா நகர சபை உறுப்பினர் தர்மதாச புஞ்சிகுமாரி, கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளார்.

அண்மையில், திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக, அவர் வவுனியா வைத்தியசாலை அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில், கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து, அவர், வவுனியா வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று முன்தினம் (20) சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவர், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பாக வவுனியா நகர சபைக்கு தேர்ந்து எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வவுனியா - கனகராயன்குளம் தெற்கு, ஊஞ்சல்கட்டி பிரிவுகளின் உள்ள கிராமசேவகர்கள் இருவருக்கு, கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து, அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர்.

பட்டதாரி பயிலுநர்களுக்கு மாவட்டத்துக்குள்ளேயே

# இடமாற்றம் வேண்டும்

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன், எம்.எஸ்.எம்.நூர்தீன்



மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரி பயிலுநர்களுக்கு வழங்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்கள் மாவட்டத்துக்குள்ளேயே கடமையாற்றக் கூடியதாக வழங்கப்பட வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நஸீர் அஹமட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விடயம்பற்றி நேற்று (21) அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச துறையில் நிரந்தர நியமனம் வழங்கும் நோக்கத்துடன் 2019 ஓகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் பட்டதாரி பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

இவ்வாறு பயிலுநர்களாகக் கடமையாற்றி வந்த 386 பட்டதாரிகளுக்கு மத்திய அரசின் ஆளணி அனுமதிக்கமைவாக தற்போது நிரந்தர அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரி பயிலுநர்கள் 185 பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டு, அவர்களில் சுமார் 25 பேர் மாத்திரமே மாவட்டத்துக்குள் கடமை புரிய இணைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஏனைய 160 ஆண், பெண் பட்டதாரிகளுக்கு, மாவட்டத்துக்கு வெளியிலேயே நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.


இவர்களில் பெரும்பாலான பட்டதாரி பெண்கள், திருமணமாகி கைக்குழந்தைகளுடன் வாழ்ந்து வருகின்ற நிலையில், வெளி மாவட்டங்களில் நியமனம் வழங்கப்பட்டுள்ளதால், குடும்பக் கட்டமைப்பு சீர்குலையும் என்று ஆதங்கப்படுகின்றார்கள்.

எனவே, தற்போதைய கொவிட்-19 தொற்றுப் பரவல் நிலைமையை கருத்திற் கொண்டு, மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகளை அவர்கள் பயிலுநர்களாக கடமையாற்றிய அலுவலகங்களிலேயே நிரந்தரமாகக் கடமையாற்றும் வகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனத்தை உடனடியாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என, அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சேதன விவசாய உர உற்பத்திக்கு

## இயந்திரங்கள் வழங்கிவைப்பு

■ வி.ரி.சகாதேவராஜா



சேதன விவசாய உர உற்பத்தியை விரிவுபடுத்தும் திட்டத்துக்கமைய, கிழக்கு மாகாண விவசாய சேவைகள் மத்திய நிலையங்களுக்கு கொம்போஸ்ட் மூலப்பொருள்களை துண்டாக்கும் இயந்திரங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தின் பணிப்புரையின் பேரில் முன்னெடுக்கப்படும் இதன் ஆரம்ப நிகழ்வு, மாகாண பிரதம செயலாளர் துசித்த பி வணிகசிங்க தலைமையில், மாகாண விவசாய பணிப்பாளர் காரியாலயத்தில் நடைபெற்றது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு முதற்கட்ட நடவடிக்கையாக 44 இயந்திரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் 14 விவசாய நிலையங்களுக்கும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 11, அம்பாறை மாவட்டத்துக்கு 10 என இயந்திரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

சேதனப் பசளையை பிரபலப்படுத்தும் முகமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கிழக்கு மாகாணத்துக்காக ஒதுக்கிய நிதியின் மூலமே இந்த இயந்திரங்கள் 55 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ளன.

மாகாணத்தில் உள்ள அனைத்து விவசாய மத்திய நிலையங்களுக்கும் இயந்திரங்களை பெற்றுக்கொடுக்க ஆளுநர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்.



## கசிப்பு விற்பனை நிலையம் முற்றுகை

■ வா.கிருஸ்ணா

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தளவாய் பகுதியில், மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் நேற்று முன்தினம் (20) மாலை மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது கசிப்பு விற்பனை நிலையம் முற்றுகையிடப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர், இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 7,500 மில்லி லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதுடன், இது தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என மட்டக்களப்பு மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

திருட்டு குற்றச்சாட்டு;

## இரு இளைஞர்களுக்கு விளக்கமறியல்

■ எப்.முபாரக்

திருகோணமலை, புல்மோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பல்வேறு திருட்டு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட இரு இளைஞர்களை, இம்மாதம் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, திருகோணமலை நீதிமன்ற பதில் நீதவான், நேற்று முன்தினம் (20) உத்தரவிட்டார்.

புல்மோட்டை, தக்குவா நகர், சதாம் நகர் பகுதியைச் சேர்ந்த 25, 21 வயதுடைய இளைஞர்களே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் புல்மோட்டை பகுதியில் அலைபேசிகள் 03, நீர் இறைக்கும் மோட்டார் இயந்திரங்கள் 03, கடைகளை உடைத்து பொருள்களை திருடியமை போன்ற குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்ட இவர்களை, திருகோணமலை நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் புல்மோட்டை பொலிஸார் ஆஜர்படுத்திய போதே, விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.



சேதனப் பசளை உற்பத்தி

## ஊக்குவிப்பு வேலைத்திட்டம்

■ எம்.ஏ.றமீஸ்

நாடு தழுவி ரீதியில் சேதனப் பசளை உற்பத்திக்கான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக, அக்கரைப்பற்று-12, கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் சேதனப் பசளையை உற்பத்தி செய்யும் வேலைத் திட்டம், நேற்று (21) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் எம்.பி.எம். பௌஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது, அக்கரைப்பற்று பிரதேச செயலக உயரதிகாரிகள், விவசாயத் திணைக்கள உத்தியோகதர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, குறித்தொகுக்கப்பட்ட காலப் பகுதிக்குள் சுமார் 5 தொன் சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கான வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சூழலில் இலகுவில் கிடைக்கும் தாவர விலங்குக் கழிவுகளைக் கொண்டு, குறைந்த செலவில் அதி கூடிய பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளும் வகையில் இச்சேதன உற்பத்தி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முன்மாதிரியான தலவாக்கலை இளைஞர்கள்

பி.கேதீஸ்





தலவாக்கலை இளைஞர்களும் தலவாக்கலை பொலிஸாரும் இணைந்து, நேற்று முன்தினம் (20) தலவாக்கலை நகரிலுள்ள யாசகர்களை சுத்தப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

நகரிலுள்ள அனைத்து யாசகர்களையும் ஓர் இடத்துக்கு அழைத்து வந்து, அவர்களின் தலைமுடி, தாடிகளை வெட்டி, வெந்நீரில் குளிக்க வைத்து புதிய ஆடைகளை அணிவித்தனர்.

அதன் பின்னர், சுவையான உணவுகளை அவர்களுக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, நகரத்தில் உள்ள கட்டாக்காலி நாய்களுக்கும் உணவளித்தனர்.

# ‘அகல’ ஆபத்து

## சீர்செய்து தருமாறும் கோரிக்கை

இரா.யோகேசன்





வட்டவளை -தியகல தோட்டப் பாடசாலைக்குச் செல்லும் வீதியானது, இடிந்து விழும் நிலையில் காணப்படுவதால் இப்பாதையை, மிக விரைவாகச் சீர்செய்து தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நோட்டன் - மஸ்கெலியா பிரதான வீதியானது, ஒப்பந்தக்காரர்களால் அகலப்படுத்தி செப்பனிடும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இவ்வாறு வீதி அகலப்படுத்தப்பட்ட போது, தியகல தோட்ட பாடசாலைக்குச் செல்லும் வீதியோடு அமைந்த, நோட்டன் பிரதான வீதியும் அகலப்படுத்தப்பட்டது. இதனால் பாடசாலைக்குச் செல்லும் பாதை குறுகியுள்ளதுடன், பாடசாலை பாதையின் ஆரம்ப பகுதியில் காணப்பட்ட கொங்ரீட் பாதையும் உடைக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி பணிகளின் போது, குறித்த பாடசாலைக்குச் செல்லும் வீதியை, சீர்செய்து தருவதாக உறுதி வழங்கியிருந்த போதும், அவை இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இதனால் மழைக்காலங்களில், இந்த வீதி மண்சரிவு எச்சரிக்கைக்கு உள்ளாகியுள்ளதுடன், பாதையிலுள்ள மண், மழையால் கழுவிச் செல்லப்படுவதால், பாதை குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

எதிர்வரும் காலங்களில் பாடசாலை ஆரம்பிக்கும் போது, அது மாணவர்களுக்கு பல வழிகளிலும் சிரமத்தை ஏற்படுத்தும் என்பதால், இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# குப்பை தீயில் தவறி விழுந்தவர் மரணம்

சுமணசிறி குணதிலக

கொஸ்லந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹிவல்கதுர-ரோஸ்பெரி தோட்டத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், எரியும் குப்பையில் தவறிவிழுந்து உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் ரோஸ்பெரி தோட்டத்தைச் சேர்ந்த 30 வயதான சிவராஜ் ரவிச்சந்திரன் என கொஸ்லாந்தை பொலிஸார் தெரிவித்துள்னர்.

இந்த மாதம் 14ஆம் திகதி தனது தோட்டத்தை துப்புரவு செய்த குறித்த இளைஞன், சேகரித்த குப்பைகளைத் தீமூட்டி எரித்துள்ளதுடன், அதற்கு அருகிலிருந்த மரத்தின் மீதேறி கிளைகளை வெட்டியபோதே தவறி தீயில் விழுந்துள்ளார்.

இதன் பின்னர் தீக்காயங்களுடன் மீட்கப்பட்ட அவர், வெல்லவாய ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், மேலதிக சிகிச்சைக்காக மொனராகலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

கடந்த ஆறு நாள்களாக மொனராகலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்றுமுன்தினம் (20) உயிரிழந்துள்ளார்.







# உதவிக்கரம்

அப்துல் கலாம் ஞாபகார்த்த உலகளாவிய நிதியத்தின் இலங்கை கிளையால், கண்டி, குண்டசாலை, பல்லேகல பிரதேசத்தில் கொரோனா தொற்றால், அன்றாட வருமானத்தை இழந்துள்ள சுமார் 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.
(மொஹமட் ஆஸிக்)

# சிறுமியின் கழுத்தில் கையை வைத்தவன் மடக்கிப்பிடிப்பு

நீலமேகம் பிரசாந்த்


கொட்டக்கலை நகரில் சிறுமி ஒருவரின் கழுத்திலிருந்து தங்கச் சங்கிலியைப் பறித்துக்கொண்டு ஓடிய திருடனை, பிரதேசவாசிகள் மடக்கிப்பிடித்த சம்பவமானது, நேற்று (21) காலை இடம்பெற்றுள்ளது.

நேற்று காலை 9 மணியளவில் சிறுமியின் தங்கச் சங்கிலியைப் பறித்த திருடன், வீடொன்றுக்கு அருகில் ஒளிந்திருந்த போதே, பிரதேசவாசிகளால் பிடிக்கப்பட்டு, திம்புள்ளை-பத்தனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனான்.

இதன்போது, பொலிஸார் நடத்திய ஆரம்ப விசாரணைகளில் சந்தேகநபர், கிரேட்வெஸ்டன் பகுதியைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை திம்புள்ளை-பத்தனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்



ஆ.ரமேஸ்

ஹட்டன்- டிக்கோயா, லிந்துலை -தலவாக்கலை நகர சபைகள், கொட்டகலை, நுவரெலியா அக்கரப்பத்தனை, மஸ்கெலியா, நோர்வூட் ஆகிய பிரதேச சபைகளின் ஊடாக அவ்வப்பகுதிகளில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்திகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

குறித்த பிரதேச சபைகளின் தவிசாளர்கள், நகர சபை தவிசாளர்கள், உறுப்பினர்களுக்கும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையில் நான்கு வெவ்வேறு இடங்களில் குறித்த கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இதன்போது, நகர மற்றும் பிரதேச சபைகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் உட்கட்டமைப்பு, அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், இ.தொ.காவின் பிரதி தலைவர் அனுசியா சிவராஜா, இ.தொ.காவின் உபதலைவர்களான கணபதி கனகராஜ், ஏ.பி. சக்திவேல் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டர்.

# ஊவா குரங்குகளுக்கு அதிர்ச்சியளிக்கும் கித்துல்



பாலித ஆரியவன்ஸ

கித்துல் உற்பத்தியில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தி வரும் குரங்குகளை விரட்டும் வகையில், குறைந்தளவு மின்சாரம் பாய்ச்சி, அதிர்ச்சியை ஏற்படுத்தும் மின் உபகரணம் ஒன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த உபகரணத்தை கித்துள் மரத்தின் அடியில் பொருத்துவதன் மூலம் கித்துல் உற்பத்திகளுக்கு குரங்குகளால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்துக்கொள்ள முடியும் என, கித்துள் அபிவிருத்தி சபையின் தவிசாளர் சட்டத்தரணி கிஹான் பெரேரா தெரிவித்துள்ளார்.

குறித்த உபகரணத்தை சூரியசக்தி மூலம் செயற்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பசறை, எல்ல, லுணுகல பகுதிகளில் கித்துள் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனம்கண்டு, வருடாந்தம் கித்துள் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், கித்துள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்ணான்டோவின் ஆலோசனைக்கமைய இந்த உபகரணம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## தடுப்பூசி செலுத்திக்கொள்ள ஆர்வம் காட்டிய

# பதுளை இளைஞர்கள்

பாலித ஆரியவன்ஸ



பதுளை மாவட்டத்தில் 20 தொடக்கம் 29 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகளுக்காக நேற்றும் (21), இன்றும்(22) சினோபார்ம் தடுப்பூசி செலுத்தப்படும் என பதுளை சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த டீ சில்வா அறிவித்திருந்தார்.

இதற்கமைய, பதுளை மாவட்டத்தில் 1,40,000 இளைஞர் யுவதிகளுக்கு தடுப்பூசி செலுத்தப்படவுள்ள நிலையில், நேற்றைய தினம் (21) தடுப்பூசி செலுத்தும் மத்திய நிலையங்களுக்கு, மிகுந்த ஆர்வத்துடன் பெருந்திரளான இளைஞர், யுவதிகள் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், கர்ப்பிணிகள், 30 வயதுக்கு மேற்பட்ட 98 சதவீதமானவர்களுக்கு தடுப்பூசி செலுத்தி நிறைவு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நானுஓயா பிரதேச ஆரம்ப வைத்தியசாலை:

# துண்டித்த நீர் மீண்டும் இணைப்பு

டி.ஷங்கீதன்



பொது மக்களின் நன்மை கருதியும் இன்றைய சூழ்நிலையை கருத்தில் கொண்டும் நானுஓயா பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆரம்ப வைத்தியசாலைக்கு நீர் இணைப்பை பெற்றுக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டதாக நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 16 ஆம் திகதி ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் புணர்நிர்மானம் செய்யப்பட்ட நானுஓயா பிரதேச ஆரம்ப வைத்தியசாலை மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

எனினும், பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டிய ஒரு தொகை பணத்தை முறையாக செலுத்தப்படாமை காரணமாக அவர்களுக்கான நீர் உட்பட ஏனைய சேவைகளை பெற்றுக் கொடுக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டது.

இந்த நிலையில், இது தொடர்பாக நேற்று (21) நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்பு, சுகாதார தரப்பினருடன் ஏற்பட்ட புரிந்துணர்வின் அடிப்படையில், குறித்த ஆரம்ப வைத்தியசாலைக்கான நீர் இணைப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கும் ஏனைய வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டதுடன் நீர் இணைப்பு உடனடியாகப் பெற்றுக் கொடுக்கப்பட்டது என்றார்.

குறித்த விடயம் தொடர்பாக, பல்வேறு தரப்பினரும் தன்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதுடன், பொது மக்களின் நன்மை கருதியும் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டாதாகவும் பிரதேச சபை தவிசாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இளைஞர்களின் வெளியேற்றம்

# நாட்டுக்கு பேரிழப்பை ஏற்படுத்தும்

## இராஜாராம் தெரிவிப்பு

துவாரகஷான்

இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளமை சிந்திக்க வேண்டிய விடயம் என மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான ஆர். இராஜாராம் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இளைஞர்கள் வெளியேறினால், அது நாட்டுக்கு பேரிழப்பை ஏற்படுத்துவதாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொத்மலை-தும்பகஸ்தலாவ தோட்டத்தில், மலையக உரிமை மீட்பு பேரவை ஊடாக, உலர் உணவுப் பொருட்களை பகிர்ந்தளித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளில் நிலையான கொள்கைகள் இருப்பதைப் போல, இலங்கையிலும் கொள்கைத் திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

அது இல்லாத காரணத்தால் தான் மாணவர்கள் நாட்டை விட்டு வெளியேற நினைக்கிறார்கள். இலங்கையில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில், மாணவர்கள் தமக்கு எதிர்காலம் இல்லை என்று நினைத்து வெளிநாடுகளுக்கு செல்ல முனைகின்றார்கள்.

அதேபோல், மலையக இளைஞர்களும் சிந்தித்து செயற்பட வேண்டிய காலம் வந்துள்ளது. மலையக மக்களின் வாழ்வாதாரத்துக்குக் காரணமாகவுள்ள காணிகள் பறிபோகும் நிலைமை உருவாகியுள்ளது. பொருளாதார அபிவிருத்தி என்ற போர்வையில் காணிகளை சுவீகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.

# ஜனாதிபதி நீட்டியிருக்கும் கரங்களுக்கு உரமூட்டுவது அவசியம்

யுத்தத்துக்குப் பின்னரான சகல பிரச்சினைகளுக்கும், ஒரேயெடுப்பில் தீர்வு காணமுடியுமென நினைப்பது முட்டாள்தனம். ஆனால், கொஞ்சம், கொஞ்சமாகத் தீர்வைக் கண்டிருந்தால், 12 வருடங்களில் பல பிரச்சினைகளைத் தீர்த்திருக்கலாம். எனினும், மாறிமாறி வந்த அரசாங்கங்கள், தங்களுடைய கொள்கைக்கு ஏற்றவகையில், காய்களை முன்னகர்த்திச் சென்றிருக்கின்றன.

சர்வதேசத்துக்குப் படத்தைக் காண்பித்தும் தென்னிலங்கை மக்களின் மனம் நோகாத வகையிலுமே சில முடிச்சுகள் அவிழ்க்கப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில், அடாத்தாகப் பிடிக்கப்பட்ட, தனியாருக்குச் சொந்தமான காணிகளை விடுவிக்கின்றோம் எனும் போர்வையில், அங்கொன்றும் இங்கொன்றுமாக விடுவிக்கப்பட்டன. தொல்பொருள் ஆராய்ச்சி எனும் பெயரில், தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்பட்டன. சில காணிகளை அபகரிப்பதற்கு தூண்டிலிடப்பட்டுள்ளது.

காணிகளையும் ஓரிரண்டு அரசியல் கைதிகளையும் விடுவிப்பது, சர்வதேசத்துக்குப் படத்தை காண்பிக்கும் ஒரு செயற்பாடாகும். ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர்களின் போதும் இந்த நாடகம், நன்றாக நெறியாள்கைக்கு உட்படுத்தப்பட்டு அரங்கேற்றப்படும்.

ஐ.நாவுக்குச் சென்றிருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பல்வேறு மட்ட சந்திப்புகளில் ஈடுபட்டுள்ளார். அதில், ஐ.நா பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டரெஸுடனான சந்திப்பின்போது, பல விடயங்களுக்குத் தீர்வுகாண்பேன் எனத் தெரிவித்துள்ளமை மகிழ்ச்சியைத் தருகிறது.

வெளியகப் பொறிமுறைக்கு இடமளிக்க முடியாது என்பதில், உறுதியாக நிற்கும் அரசாங்கம், உள்ளகப் பொறிமுறையின் கீழான தீர்வை மீண்டும், மீண்டும் வலியுறுத்தியுள்ளது. புலம்பெயர்ந்த தமிழர்களுடன் பேச்சுவார்த்தைக்குத் தயாரென்றும் நீண்டகாலம் தடுப்பில் இருக்கும் தமிழ் இளைஞர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கூறியிருக்கும் சில விடயங்களுக்கு, தமிழ்த் தரப்பிலிருந்து கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காணாமல் போனவர்களுக்கான மரணச் சான்றிதழ் அதில் முக்கியமானது. உள்ளகப் பொறிமுறை குறித்து வியாக்கியானம் செய்திருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன், "கொலையாளியே கொலையை விசாரிப்பதா?" என வினவியுள்ளார்.

நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் விடுதலை குறித்து, ஜனாதிபதி தெரிவித்துள்ளமையை பாராட்டி, சரியான ஆவணங்களைத் தயாரித்து, அவர்களின் விடுதலைக்குத் தேவையான ஏற்பாடுகளை தமிழ்த்தரப்பு, ஓரணியில் நின்று முன்னெடுக்கவேண்டும்.


தமிழ்த் தரப்புகள் பிரிந்தே நிற்பதால் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வைக் காணமுடியாது. அதேபோல, 'நாங்கள்'தான் எனப் பெயர்போட்டுக்கொள்ள முயற்சிக்காமல், அரசியல் கைதிகளின் விடுதலைக்கான வழிவகைகளைச் செய்யவேண்டும்.

அதன்பின்னர், ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கு தமிழ்த் தரப்பு, ஓரணியில் நிற்கவேண்டும். ஆளும் தரப்பினர், திறந்த மனத்துடன் செயற்படவேண்டும். தெற்கில் இருக்கும் பெரும்பான்மை தரப்பினர், ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

இவையெல்லாம் நடந்தால் மட்டுமே, ஒவ்வோர் இனத்துக்கும் நாட்டுக்கும் சுபீட்சம் ஏற்படும் என்பதை நினைவுபடுத்துகின்றோம்.








எம்.எஸ்.எம். ஐயூப்

கைகொடுக்கப் போவது

# மனித உரிமைகள் பேரவையா, ஐரோப்பிய ஒன்றியமா?

அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலை புலிகளுக்கும் இடையிலான இறுதிப் போர் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் விடயத்தில், அக்காலத்தில் ஆட்சி புரிந்த அரசியல் தலைவர்களையும் இராணுவ தலைவர்களையும் பொறுப்புக் கூறச் செய்வதை நோக்கமாகக் கொண்டதாகவே, வடக்கு-கிழக்கு தமிழ் அரசியல் இருக்கிறது.

இந்த விடயத்தில், தமிழ்த் தலைவர்கள், ஐ.நா மனித உரிமைகள் பேரவை, ஏனைய ஐ.நா அமைப்புகள் மீதே, தமது நம்பிக்கையை வைத்துள்ளனர். இதன் காரணமாகவோ என்னவோ, அவர்கள் ஏனைய தேசிய பிரச்சினைகளையோ, வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்தியையோ கைவிட்டுள்ளவர்கள் போல் காணப்படுகின்றார்கள்.

ஆனால், அவர்கள் எதிர்பார்க்கும் அளவில், மனித உரிமைகள் பேரவையிலோ, ஏனைய உலக அரங்குகளிலோ ஏதும் நடைபெறுகிறதா, நடைபெறுமா என்பதும் சந்தேகத்துக்கு உரியதாகவே இருக்கிறது. குறிப்பாக, மனித உரிமை மீறல்கள் விடயத்தில், மனித உரிமைகள் பேரவையின் வேகம், ஆச்சரியத்துக்குரிய வகையில் மந்தமாகக் காணப்படுகிறது.

போர் நிறைவடைந்து 12 வருடங்கள் முடிவடைந்துள்ளன. அதேவேளை, இலங்கையில் போர்க் காலத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளனவா என்பதைப் பற்றி, மனித உரிமைகள் பேரவை நடத்திய விசாரணையொன்றின் அறிக்கை வெளியிடப்பட்டு, ஆறாண்டுகளாகிவிட்டது. போரில் ஈடுபட்ட இரு சாராரும் மிக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளனர் என அந்த அறிக்கை கூறியது.

போர் முடிவடைந்து 12 ஆண்டுகளும் மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டு ஆறாண்டுகளும் சென்றடைந்துள்ள நிலையில், கடந்த மார்ச் மாதம் தான், மனித உரிமைகள் பேரவை, குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக தகவல்களையும் சாட்சியங்களையும் திரட்டுவதாக முடிவு செய்தது.

அத்தோடு, "அவ்வாறு மனித உரிமைகளை மீறியதாக நம்பகமான முறையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக, பயணத்தடை, பொருளாதாரத் தடை ஆகியவற்றை விதிக்க வேண்டும். அவர்களுக்கு எதிராக, தத்தமது நாடுகளிலேயே வழக்கு விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும்" என்று மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர் ஸ்தானிகர் மிச்சல் பச்சலே, 2021 மார்ச் மாதம் உறுப்பு நாடுகளிடம் கேட்டுக் கொண்டிருந்தார்.

மனித உரிமை பேரவையின் 48 ஆவது கூட்டத் தொடர், செப்டெம்பர் 12 ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நடைபெற்று வருகிறது. கடந்த 13 ஆம் திகதி, தமது வாய்மூல அறிக்கையை, பேரவை முன் சமர்ப்பித்த போதும், "மேற்கண்டவாறு இலங்கையில் குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக, சாட்சியங்களைத் திரட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது" என்று பச்சலே தெரிவித்தார்.

தமது அலுவலகம், அப்பணிக்காக தகவல் மற்றும் சாட்சியக் காப்பகமொன்றை ஆரம்பித்துள்ளதாகவும் அது ஐ.நாவிடமிருந்து பெற்ற 120,000 ஆதார ஆவணங்களையும் பொருட்களையும் கொண்டுள்ளதாகவும் இந்த வருடம் அதில் முடிந்தளவு தகவல்களை திரட்டுவதாகவும் அவர் தமது உரையில் தெரிவித்தார்.

இப்பணியை பூரணமாக நிறைவேற்ற, உரிய செலவுத் தொகையை வழங்குவதை உறுதி செய்யுமாறும் இலங்கையில் இடம்பெறுபவற்றை மிக கவனமாகக் கவனித்து வருமாறும் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமை ஆகியவற்றை முன்னெடுத்துச் செய்வதற்கான நம்பகமான செயன்முறையொன்றைப் பற்றி ஆராயுமாறும் அவர் உறுப்பு நாடுகளிடம் கேட்டுக்கொண்டார்.

எனவே இலங்கையில் மனித உரிமை விடயத்தில், மனித உரிமைகள் பேரவையின் பயணம், தமிழ்த் தலைவர்கள் எதிர்பார்ப்பதைப் பார்க்கிலும் மிக நீண்டது என்றே தெரிகிறது.

இலங்கை அரச தலைவர்களும், வருடம் தோறும் ஏதாவது ஒன்றைச் செய்து, தாம் கடந்த கால மனித உரிமை மீறல்களைப் பற்றி, நடவடிக்கை எடுத்து வருவதைப் போல் பாசாங்கு செய்து, காலத்தைக் கடத்தி வருகின்றனர்.

எனினும், மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படும் பிரேரணைகள், மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர் ஸ்தானிகர் வெளியிடும் அறிக்கைகள், இலங்கை தலைவர்களைச் சற்று குழப்பமடையச் செய்யாமலும் இல்லை.

இந்த நிலையில், ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையின் மனித உரிமைப் பிரச்சினையை மீண்டும் கையில் எடுத்துள்ளது. மனித உரிமைகள் பேரவையைப் போலன்றி, ஐரோப்பிய ஒன்றியம் உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கூடிய அமைப்பாகத் தெரிகிறது. மனித உரிமைகள் விடயத்தில், இதற்கு முன்னரும் அவ்வொன்றியம், இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருந்தது.

2010ஆம் ஆண்டு, ஐரோப்பிய ஒன்றியம், மனித உரிமைகளை இலங்கை மதிப்பதில்லை என்ற காரணத்தை அடிப்படையாகக் கொண்டு, இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகைகளை இடைநிறுத்தியது. கடந்த அரசாங்கத்தின் காலத்தில், 2017ஆம் ஆண்டிலேயே அந்தச் சலுகைகள் மீண்டும் இலங்கைக்கு வழங்கப்பட்டன.

2021 ஜூன் மாதம் 10 ஆம் திகதியும் ஐரோப்பிய நாடாளுமன்றம், இலங்கையை மீண்டும் அச்சுறுத்தும் வகையிலான ஒரு பிரேரணையை நிறைவேற்றியது. குறிப்பாக, இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை, தமிழ், முஸ்லிம் போன்ற சிறுபான்மையினருக்கு எதிராகப் பாவிப்பதை எதிர்த்தே, அந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

அந்தப் பிரேரணை, மார்ச் மாதம் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை அடிப்படையாகக் கொண்டே முன்வைக்கப்பட்டதாக, அந்தப் பிரேரணையின் சில வாசகங்கள் மூலம் தெரிகிறது.

மனித உரிமை விடயங்களில், தமது பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில், இலங்கை அரசாங்கத்தைத் தூண்டும் வண்ணம், குறிப்பாக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை, சர்வதேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்களின் தரத்துக்கு மேம்படுத்துமாறு தூண்டுவதற்காக, ஜீ.எஸ்.பி வரிச் சலுகையை ஒரு தூண்டுகோலாகப் பாவிக்குமாறும், அவசியம் ஏற்பட்டால் அச்சலுகைகளைத் தற்காலிகமாக நிறுத்துமாறும், ஐரோப்பிய நாடாளுமன்றம் அப்பிரேரணையின் மூலம், ஐரோப்பிய ஒன்றியத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.

அடுத்த திங்கட்கிழமை (செப்டெம்பர் 27), இந்த விடயங்களை இலங்கை அரசாங்கத்தின் தலைவர்களுடன் கலந்துரையாட, ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கிறது.

மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகர், ஒவ்வொரு வருடமும் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாக, அறிக்கையொன்றை சமர்ப்பிப்பார். ஒவ்வொரு வருடமும் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக, அந்தந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றிய புதுப் புது குற்றச்சாட்டுகள், அந்த அறிக்கைகளில் சுமத்தப்பட்டு வருகின்றன.

தீவிரவாதப் போக்குடையவர்கள் கைது செய்யப்பட்டு, வழக்கு விசாரணையின்றி மறுவாழ்வு நிலையங்களில் இரண்டு வருடம் வரை தடுத்து வைக்கக் கூடிய வகையில், கடந்த மார்ச் மாதம், அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டது.

ஒருவர் தீவிரவாதப் போக்குடையவர் என்று, பொலிஸார் எவ்வாறு முடிவு செய்ய முடியும் என்பதும் குற்றஞ்சாட்டப்பட்டவர், தமது பக்க நியாயத்தை முன்வைக்க அவகாசம் வழங்கப்படுவதில்லை என்ற காரணத்தையும் முன்வைத்து, இப்போது அந்த வர்த்தமானிக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2008, 2009 ஆம் ஆண்டுகளில், 11 பேரை காணாமலாக்கிய சம்பவம் தொடர்பாக, முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிராக வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு இருந்தது. சில மாதங்களுக்கு முன்னர் சட்ட மாஅதிபர், அந்த வழக்கைத் தொடர்வதில்லை எனக் கூறி வாபஸ் பெற்றார்.

அதனை அடுத்து, கொலைக் குற்றச்சாட்டின் பேரில் குற்றவாளியாகக் காணப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு, ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்டது. இச்சம்பவங்கள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் புதிதாகச் சேர்க்கப்பட்ட குற்றச்சாட்டுகளாகும்.

சீனி, அரிசி விலை ஏற்றத்தை அடுத்து, ஒகஸ்ட் 30ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்தார். அது, சாதாரண மக்களின் வாழ்க்கையில், இராணுவத்தின் தலையீட்டை மேலும் அதிகரிக்கும் என்றும் பச்சலே சுட்டிக்காட்டியுள்ளார்.

இவற்றை எல்லாம் குறிப்பிட்டுவிட்டுத் தான், மனித உரிமைகளை மீறியோருக்கு எதிரான சாட்சியங்களைத் திரட்டும் பணியை, தமது அலுவலகம் ஆரம்பித்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

சாட்சியங்களைத் திரட்டிக் கொண்டாலும் ஐ.நா சபையின் உறுப்பு நாடுகள் தான், அச்சாட்சியங்களைப் பாவித்து, மனித உரிமைகளை மீறியோருக்கு எதிராக, தத்தமது நாடுகளிலேயே வழக்கு விசாரணைகளை நடத்த வேண்டும். அது அந்தந்த நாடுகளில் ஆட்சியில் இருப்போரின் விருப்பத்துக்கு ஏற்பவே நடைபெறக்கூடும். கடந்த மார்ச் மாதம், சர்வதேச மன்னிப்புச் சபையும் இந்த விடயத்தை சுட்டிக் காட்டி இருந்தது.

தமிழ்த் தலைவர்கள் கூறுவதைப் போல், இலங்கையின் மனித உரிமைகள் பிரச்சினையை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் எடுத்துச் செல்வதானால் அது, ஐ.நா பாதுகாப்புச் சபை மூலமாகவே முடியும்.

அதற்கு சீனா, ரஷ்யா இடமளிக்குமா என்பது சந்தேகமே. இந்த நிலையில், தமிழ்த் தலைவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?



## வாழ்வியல் தரிசனம்

சுரண்டல் பேர்வழிகளுக்கு ஆசை அடங்குவதில்லை. மற்றவன் பிரச்சினைகள், துன்பங்கள் பற்றி அறிந்துகொள்வதும் இல்லை. பிறர் துன்பங்களை அறிந்தாலும், கல் நெஞ்சக்காரராக, அபகரிக்கும் நோக்கத்துடனேயே வாழ்வார்கள்.

சட்டவிரோத செயல்களைத் தேடுவதும் அநேகமான செயல்களை வெளிப்படைத்தன்மை இல்லாமல் செய்வதும் புத்திசாலித்தனமாக கறுப்பு பணங்களை, சொத்தாக மாற்றுவதும் திறமையான செயல் எனக் கருதுகின்றார்கள்.

மேலதிக சொத்துகளை வைத்து என்ன செய்வது? மரணம் தமக்கு வராது என எண்ணுபவர்கள் அநேகர் உண்டு.

இத்தகையவர்கள், தங்களுடைய சந்ததிகளைச் சோம்பேறிகளாக ஆக்குகின்றார்கள். உழைக்கத் தெரியாத பரம்பரை உருவாகும் நிலை ஏற்படும்.

தங்கள் பெற்றோர்களைப் பார்த்து, அவர்களின் வாரிசுகளும் சட்டவிரோத வாழ்க்கையுடன் தொடர்ந்து ஒட்டிக்கொள்வதும் உண்டு. இப்படியே போனால், சுற்றி நிற்கும் பொதுமக்களின் நிலைஎன்ன? உழைப்பவன் வாழ, பொது உடமை பரவ வேண்டும்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்



### வீதியில் கிரவல்; போக்குவரத்து பாதிப்பு

கிண்ணியா பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட காக்காமுனை வட்டாரம் 06 பகுதியில், வீதி அபிவிருத்தி என்ற பேரில் கொட்டப்பட்ட கிரவல்களால், போக்குவரத்து தடைப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியில் கொட்டப்பட்ட கிரவல் குவியல்கள், ஒரு கிழமையையும் தாண்டியுள்ளது. இதைச் செப்பனிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமையால், அந்த வீதி ஊடாகப் போக்குவரத்து செய்வதில், பல சிக்கல்களை எதிர்நோக்குவதாக, அந்த வீதியூடாகப் பயணிப்போர் சுட்டிக் காட்டுகின்றனர்.

காக்காமுனை ஆறாம் வட்டார பிரதான பள்ளிவாயல் வீதி, அதை அண்டிய உள் ஒழுங்கைகளிலேயே இவ்வாறு கிரவல், குவியல் குவியல்களாகக் கொட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு கொட்டப்பட்டு, ஒரு கிழமையும் கடந்து விட்டதால், இப்பகுதி ஊடாக நடமாடும் வியாபாரிகள், அவ்வீதியை விட்டு மாற்று வீதிக்குச் செல்வதால், இந்த முடக்க காலத்தில் அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியாத, அவஸ்தையான நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும், இப்பகுதியில் கட்டட வேலைக்காக பயன்படுத்தப்படும் பொருட்களை, வேலை நடைபெறும் இடத்துக்குக் கொண்டு சேர்க்க முடியாமை எனப் பல இன்னல்களுக்கு முகங்கொடுப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, உரிய கொந்தராத்துக்காரர் மற்றும் அரச அதிகாரிகள் கவனம் செலுத்துமாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

-ஹஸ்பர் ஏ ஹலீம்



## உண்ணும் உணவில்

# புரதச்சத்தின் அவசியம்



**ஏனைய அனுகூலங்களில், உயர் புரதம் நிறைந்த உணவை உட்கொள்ளலும் அடங்கியுள்ளது. அதாவது உங்கள் கலோரி தேவையில் 30% ஆனதை புரதத்திலிருந்து பெற்றுக் கொள்ள உதவும்**

**போஷாக்கு நிபுணர் ஹிரோஷன் ஜயரங்க**

உணவு விஞ்ஞானம், போஷாக்கு இளமாணி (பிரயோக போஷாக்கில் நிபுணத்துவம்), உணவு விஞ்ஞானம், போஷாக்கு முதுமாணி (பேராதனை பல்கலைக்கழகம்)

அதிகரித்துச் செல்லும் தனிநபர் வருமானம், இணையப் பாவனையின் முதிர்ச்சி, சமூக வலைத்தளங்கள் போன்றவற்றால் இலங்கையர்கள் மத்தியில் கடந்த இரு தசாப்த காலப்பகுதியில் புதுமையான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்றால் அது தவறாகாது.

அவ்வாறு ஏற்பட்ட மாற்றங்களில் மக்கள் அதிகளவு சுகாதாரத்தில் கவனம் செலுத்துவதை அவதானிக்க முடிந்ததுடன், உடற்றகைமை, ஆரோக்கியமான வாழ்க்கை முறைகள் போன்றன தொடர்பில் அதிகளவு பேசப்பட்டன. இதன் காரணமாக, நாட்டின் பல பகுதிகளிலும் உடற்பயிற்சி செய்யும் ஜிம், நடைபாதைகள் போன்றன நிறுவப்பட்டிருந்தன.

ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவது என்பதில், சராசரியாக ஒவ்வோர் இலங்கையரும் கொண்டுள்ள பரிபூரண போஷாக்கு என்பது பற்றி, தவறான அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளதை ஆய்வுகளின் மூலமாக கண்டறியப்பட்டுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்களா?

ஆம்! இலங்கை நபர் ஒருவர், சராசரியாக உள்ளெடுக்க வேண்டிய புரதத்தின் அளவு, சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மட்டங்களை விடக் குறைவாக அமைந்துள்ளது.

வளர்ந்த நபர் ஒருவரின் தினசரி மொத்த கலோரி உள்ளெடுப்பான (1,913 - 2,000 கிலோகலோரி) என்பதில் 15% ஆனது புரதம் சார்ந்ததாக அமைந்திருக்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்ட போதிலும், சராசரி இலங்கையர் ஒருவரின் இந்தப் பெறுமதி சுமார் 10% ஆக மாத்திரமே அமைந்துள்ளது.

பரிபூரண விலங்குப் புரதத்தை, சராசரி இலங்கையர் ஒருவர் பெற்றுக் கொள்ளக்கூடிய சில இலகுவான வழிமுறைகள் காணப்படுகின்றன. கோழி இறைச்சி, முட்டை ஆகியன இவற்றில் முன்னிலை வகிக்கின்றன.

ஏனெனில், பரந்தளவில் கிடைப்பதுடன், ஏனைய புரதம் அடங்கிய உணவுப் பொருட்களுடன் ஒப்பிடுகையில் விலையில் குறைந்ததாகவும் காணப்படுகின்றது. கடந்த தசாப்த காலத்துடன், புள்ளிவிவரங்களை ஒப்பிடுகையில், கோழி இறைச்சி நுகர்விலும் பெருமளவு அதிகரிப்பை அவதானிக்க முடிந்த போதிலும், இலக்கை எய்தும் நிலையை நாம் எட்டவில்லை. (http://www.daph.gov.lk/web/images/content_image/Livestock_stat/key_stat/2021/Poultry2020.pdf)

இதற்கு மேலாக, போஷாக்கில் நிறைந்த வாத்து இறைச்சி, வான்கோழி இறைச்சி போன்றன இலங்கையர்களால் மிகவும் குறைந்தளவிலேயே உட்கொள்ளப்படுகின்றன.

இந்த ஒவ்வொரு வகை இறைச்சிகளின் அனுகூலங்கள், அவை பற்றி நாம் ஏன் அதிகளவில் அறிந்திருக்க வேண்டும் என்பதை இங்கு பட்டியலிட்டுள்ளோம்:

### கோழி இறைச்சி

கோழி இறைச்சியில் உயர்ந்தளவு ஜீரணிக்கக்கூடிய புரதங்கள், குறைந்தளவு கொலாஜன் மட்டங்கள் (கோழியின் மேற்பரப்பும் எலும்புகளும் கொலாஜன் நிறைந்தவை) மற்றும், அதிகளவு போஷாக்குப் பெறுமதியும் அடங்கியுள்ளன.

கோழி இறைச்சியின் கொழுப்பில்லா புரதம், அதிகளவு அமினோ அமிலங்களைக் கொண்டுள்ளதுடன், இவை தசை வளர்ச்சிக்கு இன்றியமையாதவையாகும். உறுதியான தசை வளர்ச்சிக்கு, கோழி இறைச்சி உதவும் என்பதுடன், ஆரோக்கியமான எலும்புகளுக்கும் ஏதுவாக அமைந்திருப்பதால் ஒஸ்திரியோபொரோசிஸ் ஏற்படுவதை தவிர்க்கும்.

விற்றமின் B12, கோலின், நாகம், இரும்பு, செம்பு, அமினோ அமிலங்கள், செரோடொனின் - நல்லுணர்வை ஏற்படுத்தும் ஹோர்மோன்கள் அடங்கியுள்ளன.

### வாத்து இறைச்சி

வாத்து இறைச்சி என்பது அதிகளவு கொழுப்பு, உயர்ந்தளவு புரதம், இரும்புச் சத்து நிறைந்தது. பின்வரும் போஷாக்கு பெறுமதிகளினூடாக வாத்து இறைச்சியின் முக்கியத்துவம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயர் தரம் வாய்ந்த புரதத்துடன், அத்தியாவசிய மற்றும் அவசியமற்ற அமினோ அமிலங்கள், இரும்பு, செலனியம், விற்றமின் C, B, காபோவைதரேற்று அற்றது; ஆரோக்கியமான தெவிட்டாத கொழுப்பு, பகுதியளவு தெவிட்டாத கொழுப்பு, ஒமெகா 3, ஒமெகா 6 கொழுப்பு அமிலங்கள் உள்ளடங்கியுள்ளன.

### வான்கோழி இறைச்சி

வான்கோழி இறைச்சி என்பது அதிகளவு புரதச்சத்து நிறைந்தது. சமைத்த வான்கோழி இறைச்சியின் 100 கிராம்களில் 28 புரதம் அடங்கியுள்ளதுடன், வயது வந்தவர்களுக்கு அவசியமான புரதத் தேவையின் அரைப் பங்கை நிவர்த்தி செய்யக்கூடியது.

புரதத்துக்கு அப்பால், வான்கோழி இறைச்சியில் பின்வரும் அனுகூலங்கள் அடங்கியுள்ளன:

நயசின், கோலின், செலனியம், நாகம், விற்றமின் B-6, B-12, பொற்றாசியம், கல்சியம், மக்னீசியம், இரும்பு, தெவிட்டாத கொழுப்பு அமிலங்கள், அத்தியாவசிய கொழுப்பு அமிலங்கள்.

### முட்டைகள்

புரதத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய மிகவும் விலை குறைந்த, சிறந்த மூலங்களில் ஒன்றாக முட்டை அமைந்துள்ளது. இவை குறைந்தளவு காபோவைதரேற்றையும் குறைந்த கலோரி உணவாகவும் அமைந்துள்ளது. முட்டையில் மேலும் சில முக்கியமான போஷாக்குகள் அடங்கியுள்ளன:

விற்றமின் A: சருமம், திசுக்கள், அங்கங்கள், சுவாசத் தொகுதியை ஆரோக்கியமாகப் பேணும்.
விற்றமின் B12: microbiota, T cell உற்பத்தி, குடல் நோய் எதிர்ப்பு சக்தி ஒழுங்குபடுத்தல், நாகம், செலனியம் போன்றன ஒட்சியேற்ற அழுத்தத்தை குறைக்க உதவும் என்பதுடன், பெருமளவான தொற்றுக்களுக்கு எதிராக போராட உதவும்.

ஏனைய அனுகூலங்களில், உயர் புரதம் நிறைந்த உணவை உட்கொள்ளலும் அடங்கியுள்ளது. அதாவது உங்கள் கலோரி தேவையில் 30% ஆனதை புரதத்திலிருந்து பெற்றுக் கொள்ள உதவும். இதனூடாக உணவு வேளைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதனூடாக, உங்களுக்கு உகந்த எடை இலக்குகளை எய்தக்கூடியதாக இருக்கும். எனவே, முயற்சி செய்து, உங்களின் தினசரி உணவு உள்ளெடுப்பில் அதிகளவு புரதத்தை சேர்த்துக் கொண்டு, ஆரோக்கியமான வாழ்க்கையை முன்னெடுப்பதுடன், வித்தியாசத்தை உணரக்கூடியதாக இருக்கும்.

புதுடெல்லி

# போராட்டம் நடத்துபவர்கள் விவசாயிகள் இல்லை

புதுடெல்லி எல்லையில் போராட்டம் நடத்துபவர்கள் விவசாயிகளே இல்லை என, சர்ச்சையில் சிக்கியுள்ளார் பாரதிய ஜனதா கட்சியின் எம்.பி அக்‌ஷய்வர் லால்.

மத்திய அரசாங்கம் கொண்டு வந்த மூன்று புதிய வேளாண் சட்டங்களை திரும்பப் பெறக்கோரி, புதுடெல்லி எல்லையில் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். பல மாதங்களாகத் தொடரும் இந்தப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர, மத்திய அரசாங்கம் பல வழிகளில் முயன்றும் ஒன்று கூட கைகொடுக்கவில்லை.



புதிய வேளாண் சட்டங்களில் திருத்தம் செய்வதாக, மத்திய அரசாங்கம் கூறியும், அதனை முழுமையாகத் திரும்பப்பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி, விவசாயிகள் தங்கள் போராட்டத்தைத் தொடர்கின்றனர். வெயில், மழை, இரவு பகல் பாராமல், போராட்டம் நடந்து வரும் சூழலில், புதுடெல்லி எல்லையில் போராடுபவர்கள் உண்மையான விவசாயிகளே அல்ல என பாஜக எம்.பி.அக்‌ஷய்வர் லால் கூறியுள்ளார்.

மேலும், விவசாயச் சங்கத் தலைவர் என்று கூறிக்கொள்ளும் ராகேஷ் திகாயத், கொள்ளைக் கூட்டத்துக்கு தலைவன் என்றும் பாகிஸ்தான் ஆதரவு பெற்ற அரசியல் கட்சியை சேர்ந்தவர்களே போராட்டம் நடத்தி வருவதாகவும் அக்‌ஷய்வர் லால் விமர்சித்துள்ளார்.

கனடா உள்ளிட்ட இன்னும் பல வெளிநாடுகளில் இருந்து போராட்டத்துக்கான பணம் வருவதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

திருச்சி

# மக்கள் விரோதச் சட்டங்களை மத்திய அரசு கைவிட வேண்டும்

மக்கள் விரோதச் சட்டங்களை மத்திய அரசாங்கம் கைவிட வேண்டும் என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் கே.எம்.காதர் மொகிதீன் தெரிவித்துள்ளார்.

வேளாண் சட்டங்கள், பெற்றோல், டீசல் விலை உயர்வு, பொதுத்துறை நிறுவனங்கள் தனியார் மயம் உள்ளிட்ட மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டித்து, எதிர்க்கட்சிகள் நாடு முழுவதும் நடத்திய போராட்டத்தின் ஒரு பகுதியாக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி சார்பில் அதன் தேசிய தலைவர் கே.எம்.காதர் மொகிதீன் தலைமையில், திருச்சி காஜா நகரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தின்போது செய்தியாளர்களிடம் காதர் மொகிதீன் கூறுகையில், "புதுடெல்லியில் விவசாயிகள் நடத்திவரும் போராட்டம், ஓராண்டை நெருங்கிக் கொண்டிருக்கிறது. அறவழியில் அவர்கள் நடத்தி வரும் போராட்டம், தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் விவசாயிகள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது. மத்திய அரசாங்கம் வேளாண் சட்டங்களைக் கைவிட்டு, விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும்.



இன்றுவரை விவசாயிகள் போராட்டம், அமைதியாகவும் சட்டரீதியாகவும் நடைபெற்று வருகிறது. அது, வன்முறை போராட்டமாக மாறிவிடாமல் தடுப்பது மத்திய அரசாங்கத்தின் தலையாய கடமையாகும். எனவே, மத்திய அரசாங்கம் விவசாயிகள் போராட்டத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். மக்கள் விரோதச் சட்டங்களைக் கைவிட வேண்டும்" என்றார்.

சென்னை

# "என்னை மன்னித்துவிடுங்கள்"

அரசாங்க அதிகாரிகளை அவமானப்படுத்தும் வகையில் பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் உமா பாரதி பேசியுள்ள வீடியோ இணையத்தில் வைரலாக பரவி வருகிறது.

பா.ஜ.க மூத்த தலைவர்கள் சர்ச்சையான கருத்துகளைத் தெரிவிப்பது தொடர் கதையாகி வருகிறது. ஆனால், இம்முறை அரசாங்க உயர் அதிகாரிகள் குறித்து உமா பாரதி பேசியுள்ளது, பல்வேறு தரப்பினர் இடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்கத்தை நடத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் உயர் அதிகாரிகளை மட்டுப்படுத்தும் வகையில், பா.ஜ.க மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான உமா பாரதி சர்ச்சையான கருத்துகளைத் தெரிவித்து வருகிறார். "அரசாங்க அலுவலர்களை வைத்திருப்பதே எங்களின் செருப்புகளைத் தூக்கத்தான்" என்ற ரீதியிலும் அவர்களுக்கு எனத் தனிப்பட்ட திறன் இல்லை என்றும் அவர் விமர்சித்துள்ளார். இது குறித்து வீடியோ வைரலாகி வருகிறது. இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில் உமா பாரதி மன்னிப்பு கேட்டுள்ளார்.




"என்னை மன்னித்துவிடுங்கள்; எனது நோக்கம் சரியாக இருந்தாலும், நான் பயன்படுத்திய வார்த்தைகள் சுய கட்டுப்பாட்டை மீறும் வகையிலேயே அமைந்திருந்தன. அதிகாரபூர்வமற்ற உரையாடல்களின்போது கூட இம்மாதிரியான வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது" என்று நான் இன்று முதல் பாடம் கற்றுக்கொண்டேன்" என்றார்.

சென்னை

# அதிகாரங்களைப் போராடித்தான் பெறவேண்டும்

தமிழகத்தில் உள்ளூராட்சி அமைப்புகள் தங்கள் அதிகாரங்களைப் போராடித்தான் பெறவேண்டி இருப்பதாக, மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, கடந்த இரண்டு வருடங்களாக கிராம சபைக் கூட்டம் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. புதிய அரசாங்கம் அமைந்த பிறகு, இந்தக் கிராம சபைக் கூட்டத்துக்கு அனுமதி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், புதிய அரசாங்கமும் கிராம சபைக் கூட்டம் நடத்தத் தடை விதித்தது.



இந்த நிலையில், தி.மு.க ஆட்சியில் முதல் முறையாக அக்டோபர் 2ஆம் திகதி காந்தி ஜெயந்தி நாளில், கிராம சபைக் கூட்டங்கள் நடத்த தமிழக அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

இந்நிலையில், இது தொடர்பாக, கமல்ஹாசன் நேற்று (21) தனது, ட்விட்டர் பக்கத்தில், 'கிராம சபைகளை நடத்தும் அதிகாரத்தில் மாநில அரசாங்கமும் மாவட்ட நிர்வாகமும் தலையிட முடியாது என, பஞ்சாயத்துத் தலைவர் ஒருவர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு வந்துள்ளது. தமிழகத்தில் உள்ளூராட்சி அமைப்புகள் தங்கள் அதிகாரங்களைப் போராடித்தான் பெறவேண்டி இருப்பதன் அடையாளம் இது" எனப் பதிவிட்டுள்ளார்.

தஞ்சாவூர்

## கள்ளக்காதலுக்கு இடையூறு:

# ஏழு வயது சிறுமியின் உடல் கால்வாயில் மீட்பு

தஞ்சாவூரில் கள்ளக்காதல் விவகாரத்தில் அடித்துக் கொன்று, கால்வாயில் வீசப்பட்ட 7 வயது சிறுமியின் உடல் மீட்கப்பட்டது.

தஞ்சாவூர் கோரிகுளம் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு, இரண்டு குழந்தைகள் உள்ளனர். சில வருடங்களுக்கு முன்பு, கணவர் இறந்துள்ளார். இதன்பிறகு, குடும்பம் நடத்த போதிய வருமானம் இன்றி, மனைவி தவித்துள்ளார். இதைத் தொடர்ந்து, இவருக்கு, அண்ணன் முறைகொண்ட அவரது உறவினருடன் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

நாளடைவில் இந்தப் பழக்கம் கள்ளக்காதலாக மாறியது. இதனை அறிந்த உறவினர்கள் பெண்ணைக் கண்டித்துள்ளனர். கள்ளக்காதலனுக்கு திருமணம் ஆகி இரண்டு குழந்தைகள் உள்ளனர். அவரது மனைவி, வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார். உறவினர்கள் பலமாகக் கண்டித்தும் இருவரும் கள்ளக்காதலை விடுவதாக இல்லை. இருவரும் அடிக்கடி தனிமையில் இருந்துள்ளனர்.

தங்களின் கள்ளக்காதலுக்கு சிறுமி இடையூறாக இருப்பதாக இருவரும் நினைத்துள்ளனர். இந்த நிலையில், ஒரு கட்டத்தில் ஆத்திரம் அடைந்த கள்ளக்காதலன், சிறுமியை கடுமையாக தாக்கியுள்ளார். இதில் சம்பவ இடத்திலேயே சிறுமி உயிரிழந்துள்ளார். இதனையடுத்து உயிரிழந்த சிறுமியின் உடலை என்ன செய்வதென்று தெரியாமல் இருவரும் திகைத்தனர்.

பின்னர், சிறுமியின் உடலை கல்லணை கால்வாயில் வீசியுள்ளனர். மேலும், உயிரிழந்த சிறுமியின் புகைப்படத்தை வெளிநாட்டில் உள்ள தனது மனைவிக்கு அனுப்பியுள்ளார் கணவன். இதை பார்த்து அதிர்ச்சி அடைந்த அவரது மனைவி, தஞ்சையில் உள்ள உறவினர்களிடம் இது குறித்து தெரிவித்துள்ளார். உடனடியாக உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் புகார் கொடுத்தனர்.

இதைத் தொடர்ந்து கள்ளக்காதலர்கள் இருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

புதன்கிழமை, 22 செப்டெம்பர் 2021 தமிழ் Mirror



ஐ.பி.எல்:

# பெங்களூரை சுருட்டிய கொல்கத்தா

இந்தியன் பிறீமியர் லீக்கில், ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகர் அபு தாபியில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருடனான போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸ் இலகுவாக வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பெங்களூர்

பெங்களூர்: 92/10 (19 ஓவ. ) (பந்துவீச்சு: அன்ட்ரே ரஸல் 3/9, வருண் சக்கரவர்த்தி 3/13, லொக்கி பெர்கியூசன் 2/24, பிரசீத் கிருஷ்ணா 1/24)

கொல்கத்தா: 94/1 (10 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷுப்மன் கில் 48 (34), வெங்கடேஷ்ன் ஐயர் ஆ.இ 41 (27) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: வருண் சக்கரவர்த்தி

இந்நிலையில், டுபாயில் இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை சண்றைசர்ஸ் ஹைதரபாத் எதிர்கொள்ளவுள்ளது.



## பாகிஸ்தான் சுற்றுப் பயணங்களிலிருந்து இங்கிலாந்து வாபஸ்

இரண்டு இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளுக்காக பாகிஸ்தானுக்கான அடுத்த மாத நடுப் பகுதியிலான இங்கிலாந்தின் சுற்றுப் பயணமானது இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இங்கிலாந்து ஆண்கள், பெண்கள் அணிகள் விளையாடவிருந்ததுடன், பெண்கள் அணி மேலும் மூன்று ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் விளையாடவிருந்தது.

எனினும், இறுதி நிமிடத்தில் நியூசிலாந்து வாபஸ் பெற்றதைத் தொடர்ந்தே இங்கிலாந்தின் குறித்த அறிவிப்பும் வெளிவந்துள்ளது.




ஸ்பானிய லா லிகா தொடர்:

## சமநிலையில் பார்சிலோனா கிரனடா போட்டி

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில், பார்சிலோனாவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், கிரனடாவுக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

பார்சிலோனா சார்பாகப் பெறப்பட்ட கோலை றொனால்ட் அரஜுவோவும், கிரனடா சார்பாகப் பெறப்பட்ட கோலை டொமின்கோஸ் டுவர்ட்டேயும் பெற்றனர்.



## யுனைட்டெட்டிலிருந்து வெளியேறும் பொக்பா?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மத்தியகளவீரரான போல் பொக்பாவின் அக்கழகத்துடனான ஒப்பந்தமானது அடுத்தாண்டு முடிவடைகின்றது.

இந்நிலையிலேயே, பொக்பாவைக் கைச்சாத்திட ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனாவும், பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனும் விரும்புவதாகக் கூறப்படுகிறது.

பருவகால முடிவிலேயே கழகத்தில் முடிவு எடுப்பார் என பொக்பாவின் முகவர் மினோ றயோலா அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## இந்தியாவைத் தோற்கடித்த அவுஸ்திரேலியா

இந்தியப் பெண்கள் அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் அவுஸ்திரேலியா வென்றுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், மக்கேயில் நேற்று நடைபெற்ற குறித்த போட்டியில் ஒன்பது ஓவர்கள் இருக்கத் தக்கதாக 9 விக்கெட்டுகளால் அவுஸ்திரேலியா வென்றிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

இந்தியா: 225/8 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: மிதாலி ராஜ் 63, யஸ்டிகா பாட்டியா 35, றிஷா கோஷ் ஆ.இ 32, ஜுலான் கோஸ்வாமி 20 ஓட்டங்கள். பந்துவீச்சு: டார்சி ப்றோண் 4/33, ஹன்னாஹ் டார்லிங்டன் 2/29, சோஃபி மொலினெக்ஸ் 2/39)

அவுஸ்திரேலியா: 227/1 (41 ஓவ. ) (துடுப்பாட்டம்: றேச்சல் ஹெய்ன்ஸ் ஆ.இ 93, அலைஸா ஹீலி 77, மெக் லன்னிங் ஆ.இ 53 ஓட்டங்கள்)

ரஷ்யா

ரஷ்ய பாராளுமன்ற தேர்தலில்

# புட்டினின் கட்சி வெற்றி

கடந்த 17 ஆம் திகதி ஆரம்பித்து மூன்று நாள்கள் நடைபெற்ற ரஷ்யாவின் பாராளுமன்றத் தேர்தலில் அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் கட்சி வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



புட்டினின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கான அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றுவதற்கு புடின் தலைமையிலான ஆளும் ஐக்கிய ரஷ்யா கட்சிக்கு பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியம் என்பதால் இத் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது.

மேலும், அந்நாட்டின் முக்கிய எதிர்க்கட்சித் தலைவரான அலெக்சி நவால்னியை சிறையில் அடைத்தமை, அவரது கட்சி உட்பட பல எதிர்க்கட்சிகளைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தடை விதித்தமை போன்ற சர்ச்சைகளுக்கு மத்தியில் இத்தேர்தல் நடந்தது.

அந்தவகையில் இதுவரை எண்ணப்பட்ட 80 சதவீத வாக்குகளில் ஐக்கிய ரஷ்யா கட்சி 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுள்ளதாகவும் மொத்தமுள்ள 450 இடங்களில் 350-க்கும் அதிகமான இடங்களில் அவர்களது கட்சி வெற்றி பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க வாக்குப்பதிவில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ள நிலையில் தேர்தல் ஆணையம் அதனை மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

# விந்தணு விபரீதமானது

கருத்தரித்தல் சிகிச்சைக்காக வந்த பெண்களுக்குத் தனது சொந்த விந்தணுவைப் பயன்படுத்தி வைத்தியர் ஒருவர் கருத்தரிக்கச் செய்த சம்பவம் அமெரிக்காவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



குறித்த மருத்துவரின் விந்தணுவால் பிறந்த இளம்பெண் கொடுத்த புகாரின் பேரில் இச்சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. நியூயோர்க்கில் உள்ள பிரபல மகப்பேறு மருத்துவர் மோரிஸ் வோர்ட்மேன், கடந்த 1980ஆம் ஆண்டு தன்னிடம் கருத்தரித்தல் சிகிச்சைக்காக வந்த பெண் ஒருவரிடம் உள்ளூர் மருத்துவ மாணவர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட விருந்தணுவைச் செலுத்தி அவரைக் கருவுறச் செய்ய உள்ளதாகக் கூறியுள்ளார்.

அதற்கு அப் பெண்ணும் சம்மதம் தெரிவித்த நிலையில் அவரை ஏமாற்றி தனது சொந்த விந்தணுவைச் செலுத்தியுள்ளார்.

இதனையடுத்து குறித்த பெண்ணுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது. தற்போது அக்குழந்தையும் வளர்ந்து பெரியவளாகி அதே மருத்துவரிடம் சிகிச்சை பெறச் சென்ற நிலையில், அப் பெண் தனது டிஎன்ஏவை பரிசோதனை செய்து பார்த்துள்ளார்.

இதன்போது அப்பெண்ணுடன் ஒத்த ஒன்பது உடன்பிறப்புகள் இருப்பதாக தெரியவந்துள்ளது.

இதனால் அதிர்ச்சியடைந்த அவர் அது குறித்து தனது தாயாரிடம் விசாரித்த போது உண்மை தெரியவந்துள்ளது. இதில் அதிர்ச்சி அடைந்த அப்பெண்ணும் அவரது தாயாரும் இதுகுறித்து மருத்துவர் மோரிஸ் வோர்ட்மேன் மீது வழக்கு தொடுத்துள்ளனர். தற்போது இச் சம்பவம் விவாதப் பொருளாக மாறியுள்ளது.

சிங்கப்பூர்

# துரியன் பழத் தோலில் பண்டேஜ்

சிங்கப்பூரில் ஆண்டு தோறும் ஒரு கோடியே இருபது இலட்சம் துரியன் பழங்கள் உண்ணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



பழங்களை உண்ட பின் தூக்கி வீசப்படும் தோலில் இருந்து பிரித்தெடுக்கப்படும் செலிலோஸை உறைய வைக்கும் விஞ்ஞானிகள், பின்னர் அதனுடன் கிளைக்கோரலைஐ கலந்து பண்டேஜ்களை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

வழக்கமான பண்டேஜ்களை விட குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்படும் இவை காயமடைந்த பகுதிகளைக் குளிர்ச்சியாக வைப்பதால் காயங்கள் விரைவில் குணமடைவதாகக் கூறப்படுகின்றது.

இதே போல் சோயா அவரை உட்பட பல்வேறு தானியங்களின் தோலை பண்டேஜ்-களாக மாற்ற முடிவதால் எதிர் காலத்தில் உணவுக் கழிவுகளின் அளவு குறையும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யா

ரஷ்ய பல்கலைக்கழகத்தில்

# துப்பாக்கிச்சூடு; 8 பேர் மரணம்

ரஷ்யாவின் பேர்ம் நகரிலுள்ள பல்கலைக்கழகத்தினுள் அங்கு படிக்கும் மாணவர் ஒருவர் கண்மூடித்தனமாக நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 8 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

நேற்று முன்தினம் (20) இடம்பெற்ற இச்சம்பவத்தில் 12 பேருக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும், தகவல் அறிந்து அங்கு சென்ற பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்திய நபரைக் கைதுசெய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணையில் குறித்த மாணவரின் பெயர் தைமூர் பெக்மன்சுரோவ் எனவும் அவரது வயது 18 எனவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, தான் ஓர் அரசியல்வாதியோ அல்லது பயங்கரவாதியோ அல்ல என்றும் அவர்



தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்கா

# மீண்டும் உயிர்த்தெழுந்த பெண்

மருத்துவர்கள் இறந்து விட்டதாக அறிவித்த பெண் ஒருவர் திடீரென உயிர்த்தெழுந்த சம்பவம் அமெரிக்காவில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கத்தி படன் என்ற மேற்குறித்த பெண் அமெரிக்காவின் மேரிலாண்டு பகுதியைச் சேர்ந்தவர்.

இவர் கோல்ப் மைதானத்தில் விளையாடிக் கொண்டு இருந்த போது ஒரு தொலைபேசி அழைப்பு வந்ததாகவும் அதில் அவரது மகள் பிரசவ வலியில் துடிப்பதாகவும், அவரை மருத்துவமனையில் அனுமதித்து உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்த அவர் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்ற போது அங்கு அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அவரது இரத்த அழுத்தம் முழுவதும் குறைந்து மூளைக்கு ஒட்சிசன் செல்வது தடைப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏறத்தாள 45 நிமிடங்கள் அவரது சுவாசம் தடைப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் அறிவித்தனர்.

அதேவேளையில் அவரது மகளும் வெற்றிகரமாக குழந்தையொன்றைப் பிரசவித்துள்ளார்.



இந்நிலையில் இறந்து விட்டதாகக் கூறப்பட்ட கத்தியின் ஒட்சிசன்அளவு, திடீரென அதிகரித்து மீண்டும் உயிர் பிழைத்தார். இவ்அதிசயத்தால் மருத்துவர்களே ஆச்சரியத்தில் மூழ்கினர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த கத்தி "இது எனது வாழ்க்கையின் இரண்டாவது வாய்ப்பு. எல்லா வகையிலுமே நான் ஸ்பெஷலான ஒரு பெண். இனி வரும் ஒவ்வொரு நொடியையும் நான் ரசித்து வாழ்வேன். இது என் புது வாழ்வு" என தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 22 செப்டெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.